உ
ஓம் விநாயகநம

PARANTHAN 4 MAR 80

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

University of Sri Lanka RECEIVED Periodicals Division Library

தவம் பணி மலர்
இதழ் 3 | சுடர் 6
சித்தார்த்தி வருஷம் மார்கழி மாதம் 20ம் திகதி
வெள்ளிக்கிழமை [4 - 1 - 1980]

# உலகில் இயற்கையின் எண்ணங்களை ஒழித்து பற்றினை நீக்கிய மகான் கட்கு உற்றவன் எம்பிரான் சிவன்

## அவநெறியை நீக்கி தவம் பணியும் உறுதியை சைவ மக்கள் பெற வேண்டும்

திருஞான சம்பந்தர் பாண்டி நாட்டில் மதுரைக்குச் செல்லும்போது எம்பெருமான் சிவனை நினைந்து அவர் இருக்கும் திருவாலவாய்க் கோயிலை கண்டு பாடுகின்றபோது மங்கையர்க் கரசியார் குலச்சிறை நாயனர் இருவருடைய பணியுமே சிறப்பித்து பாடியருள்கின்ருர், அப் பதிகத்தை இம்முறை சந்திர தீபம் தாங்கிவரும் புண்ணியம் பெற்ள்ளது.

புண்ணியம் தவத்தின்வழி போலி ஏமாற்று கம்பீரம் முதல் பாதகங்கள் அவச்செயல்களின் வழியாக உள்ளன என்பதை நீவீர் யாவரும் மறத்தல் கூடாது. எங்களது சைவ நெறியில் மேன்மையான முத்தி நெறியைப் பெறுவதற்காகவே கோயில்கள் அமைந்தன.

கோயில் வழிபாட்டின் மூலமே மக்கள் அருள்நிலையைப் பெற்றனர். மாணிக்க வாசகர் இதனை நின்பெரும் கோயில் வாய்தலில் பிச்சதேற்றிஞய் பெரிய அன்பருக்கு உரியனுக்கிஞய் என்று சொல்கின்ருர்.

எமது சைவ நெறியில் உள்ள எல்லாக் கோயிலும் வழிபாட்டிற் குரிய இடமாக உள்ளன. இன்று அவை வியாபார நிலையமாக மாறிவிட்டன என்பது மறுக்க முடியாத உண்மை. எல்லாக் கோயிலும்ம காசு பணம் வசூலில் பணம் படைத்தோரைக் கௌரவித்தல் பாராட்டல் முதலிய அவமான பல செயல்களைச் செய்திடும் நிலையமாக வந்து விட்டன,

இலங்கை நகரில் எங்காகிலும் ஒரு கோயில் தவநெறிக் குரியனவாக இருப்பது என்பது கேள்விக்குரிய நிலையாக வந்துள்ளது. ஏன் அப்படி வந்துள்ளது என்ருல் கோயிலை நிர்வாகிப் போரும் கோயிலில் பூசை முதல் சகல தொண்டுகளைப் புரிவோரும் கோவில் தமது சீவனத்திற்கு வருமானம் தேடும் நிலையமாக ஆக்கி விட்டாத காரணமாகும்,

மக்கள் நெடுங் காலமாக பழகி வந்த பழக்கத்தில் கோயிலை மதித்தார்களே ஒழிய கோயில் என்ருல் என்ன கோயிலில் யார் இருக்கிருர்? அவரை அங்கு உறையப் பண்ணல் எப்படி? யாரால் அதைச் செய்திட முடியும் என்றதை கொஞ்சமேனும் சிந்தியாது போய்விட்டனர். அந்த ஓர் நிலையால் கோயில் என்ருல் ஏதோ அருச்சனை செய்து நாம் கும்பிடுவம் அவ்வளவு தான். இந்தக் கோயிலில் கடவுள் இருப்பாரோ என்ற எண்ணம் இல்லாது கும்பிடத் தொடங்கினர்.

இந்த ஒரு நிலை கோயிலை நிர்வகிப்பதற்கு கோயிலை தம் வசதிப்படி ஆக்கித்தம இட்டப்படி நடந்து ஏமாற்றிப் பிழைக்கும் பிராமணர்க்கு நிர்வாகிகட்கு பணம் சேகரித்து வாழ்க்கை நடாத்தி இந்தப் பழியான செயல்களால் தமது ஒழுக்கமே கெட்டு குடிகாரனுகி வியபிசாரகளாக மாறி சூதாடு வோராக மாறி வேடிக்கை சினிமா இவற்றில் ஈடுபடுவோராக மாறி முற்றிலும் நன்மை தரும் அருள் நெறியை மறந்து பாழ் பட்ட ஒரு நிலைக்கு வந்துள்ளனர். இந்த பழுதான நிலை இல்லாத ஒரு கோயில் தானும் இலங்கை நாட்டில் இல்லை என்ற வகைக்கு நிலை வந்து விட்டது.

கோயிலை பரிபாலிக்கும் திருப்பணிச் சபைகள் தனிப்பட்ட எஜமானகள் அந்தணர்களது நடத்தை உண்மைக்கு முணுக வழிமாறிட அதை நல்நெறிப் படுத்தி முன்புள்ள அருள் நெறியைப் புகுத்த எத்தனிப்பாரை இவன் பேயன் என்றும் சைவத்தைப் பழுதாக்கிருன் என்றும் சைவமக்கள் கடவுள் நம்பிக்கை இல்லாமல் போகப் போகிருர் என்றும் எத்தனையோ பொய்களை பிரளிகளைச் சொல்லி தங்கள் பழுதான நிலையை சரி என்று ஸ்ரப்படுத்த நினைக்கின்றனர்.

கோயில் சொத்திலும் சைவ அற நிலையங்கள் சொத்திலும் நன்கு களவெடுத்து உண்டு பழகிய செட்டி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியர் என்மீது இப்படி ஒரு பழியை நேரில் ஓர் அத்துவக் காத்து முன்னிலையில் தெரிவித்தார். அவர் ஓர் கதிரேசன் கோயில் திருப்பணிச் சபைக் காரியதரிசி.

திருஞான சம்பந்த மடாதிபதி சிவதர்ம வள்ளல் சவுக்கார முதலாளி சிவத்தமிழ் செல்வி இன்னும் 33 குண்டப் பிராமணர் பலராகும் இவர்கள் தங்கள் தவற்றை நாம் சுட்டிக் காண்பிப்பது தவறு என்றும் அப்படியாக தவற்றைச் சுட்டிக் காண்பியாது விடுத்தால் தாம் நமக்கு மாதாந்த பண உதவிசெய்முன் வருவதாகவும் நம் பத்திரிகையை ஆதரிக்கும் செல்வந்தரிடம் கேட்டுக் கொண்டனர், இதனுலே என்ன தென்படுகின்றது என்ருல் இந்தப் பாதகர் இன்னமும் தம்பழுதை நீடித்திட வழி காணுகின்ருர்களே ஒழிய இந்தப் பாதகர் அனைவரும உண்மையான தொண்டு செய்பவர் அல்ல என்பது வெளிப்படையாக நாம் உணர முடிந்தது.

திருஞான சம்பந்த மடாதிபதி உண்மையை உணர்பவராக இருப்பின் அவர் என்னுடைய கருத்துக்களை உணர்ந்து தான் யார் பேரில் மடம் வைத்தாரோ அவர் பேரின் மானத்தைக் காப்பதற்காதல் சற்று தல் தருநது இருப்பார். இவர் திருஞான சம்பந்தர் பேரில் காவியும் கடுக்கனும் மொட்டைத் தலையும் கொணடார் அன்றி மற்று அவர் உள்ளும் புறமும அமாவாசை போன்றதே.

மற்றுக் காலங்களில் சொற்ப சொற்ப நேரம் இரவில் நிலவு இருக்கும் ஆனுல் அமாவாசையன்று ஒரு நிமிட நேரமாதல் நிலவு இராது. நாம் என் செயலாம் அமாவாசையை பூரணையாக்கலாமா? அல்லது பின்னிலவு முன்னிலவு ஆக்கலாமா? இதுபோன்றது தான் இந்தத் தம்பிரான் சிவத் தமிழ் சவுக்கார வள்ளல் 33 குண்டத்துக் குண்டர் இவர்களது செயலும. இவர்கள் அன்றிருந்த சமணர் புத்தர்களிலும் மோசமான வழி சைவ நெறியில் பழுது புரிவோர்

ஆதலினுலே தவம பணிதல் என்றவகை நம் நாட்டில் முற்ருகவே அருகி வந்துள்ளது என்பதை சைவ மக்களாய நீவீர் அனைவரும் உணர வேண்டும்.

அருணகிரியார் ஓர் திருப்புகழில் மாதவ மெணுமல் பணிவரும் தீது அகல ஓதிப் பணியாம் தீ நரக மீதில் உழல்வார் என்கின்ருர். முருகன் அருள் பெற்ற பெரியோர் அவரின் வாக்கை சற்று நாம் சிந்திக்க வேண்டும். நாம் இறைவனைக் கும்பிடுகின்ளும். கும்பிடும் போது தவத்தின் கார்பாய நெறி நின்றே கும்பிட வேண்டும். தவம் செய்வதை யாது என எல்லார்க்கும் விளங்க வேண்டும். தவத்திற்கு அத்திவாரம் தருமமாகும். தருமததின் வழியே தவம் பெருகும். அதர்மத்தின் எந்த வழியும் தவமாகாது.

கோயிலில் ஒலிபெருக்கி சுவாமிக்கு லயிற் அடித்தல் சனங்கள் கட்டுப்பாடில்லாது ஆண் பெண் நெருங்கிக் கொள்ளல் இவை தவத்தின் வழி அன்று. தவம் என்பது பொறுமை உண்மை சாந்தம் இவையின் அம்சமாகும். சுந்தர மூர்த்தி சுவாமிகள் இறைவன் ஆட்கொண்ட பின் இறைவனிடத்து தவநெறிகள் வேண்டிப் பெற்றுக் கொள்கின்றூர். அத்தா வேண்டிக் கொள்வேன் தவநெறியே என்ற பாடலே பாடியுள்ளார், தவநெறி பெறுதற்கரிய பேருதலின்தவ நெறி நெறிகள் வேண்டப் பெற்றது தவ நெறிகள் சாதிக்க வல்லான் தன்னை என சிவனே தவநெறியுடன் கூடி உள்ளார் எனக் கூறிடுகின்ருர் திருநாவுக்கரசர்.

ஆதலினுலே கோவில் வழிபாட்டில் தவநெறி என்பது எப்படி இருக்கும்? அதுதான் கேள்வி. பணக்காரர் அர்ச்சித்தால் பெரிய பஞ்சாலாத்தி சிவத்தப் பெண் அர்ச்சனை தட்டுக் கொண்டால் சிரிப்புடன் பரிந்த அர்ச்சனை தன் பகைவர் வந்தால் அவரைக் கண்டு முகம் சுழித்தல் ஆயிரம் நாமம்சொல்லி அர்ச்சிப்பது என அர்ச்சனை துண்டு கொடுத்து ஐந்து நாமம் சரியாக சொல்ல வகையில்லாது செய்தல் அர்ச்சிக்கும் போது சிமிட்டல் சிரித்தல் நக்கல் வார்த்தை வேடிக்கை சுரிரெனக் கோபித்தல் இவை எல்லாம் தவ நெறியோ தபவு செய்து பல்தாருங்கள்.

நல்லூர் திருக்கேதிச்சர நிர்வாகம் யாவும் தவநெறியுடன் கலந்தது என்று சொல்ல முடியாது இருக்கின்றபோது ஏனைய கோவில் பற்றி நாம் கூறிப பயனில்லை.

பல ஆண்டு காலமாக தவநெறிகள் கோவில்களால் அகன்று அகன்று பழி வஞ்சனை பொய் காடைத்தனம் இவை பெருகி வழிபாடு யாவும் புனிதமற்ற தாய் வந்துள்ளன.

இந்த வழிபாட்டில் குறைபாடு வந்ததின் காரணம் முதற்கண் அந்தணர் அடுத்து நிர்வாகிப் பேர். இவர்களிடத்து கடவுள் நம்பிக்கையும் பயபக்தியும் இல்லாயல் போயதகோரணம்.

எந்த ஆலயத்திலும் இறைவனுக்காக கொடுபடும் பொருளை அந்த ஆலயத்தில் இருக்கும் கடவுள்மேல் பற்றுடையவன் தான் தீண்ட விரும்பான தனது கடவுளை பெயரைச் சொல்லி வஞ்சியான பிறரை ஏமாற்றி பொருள வாங்கான். பொய்மையாளரை பாடிப் புகழ்ந்து பணம் பெறுன'

கீழே தரப்பட்ட தேவாரத்தை நன்கு உணர்ந்தால் எமது சைவ சமயத்து ஆணும் பெண்ணும் எவ்வாறு ஒழுக வேண்டுமென்பதை மங்கையர்க் கரசியார் மந்திரி குலச்சிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் இவர்கள் சைவசமயத்தில் நடந்து சொள்ளும் வரலாற்றை இத்திருப்பதிகமே காட்டுகின்றது. அதன் உரையை நன்கு படியுங்கள். சிந்தியுங்கள் தெளியுங்கள். நாம் இன்று இலங்கை நகரில் எங்காகிலும் ஓர்இடத்தில் அவர்களைப் போன்ற ஒருநிலையில் யாராகிலும் இருக்கின்றாரோ? எண்ணிப்பாருங்கள் கபடமற்ற உள்ளத்தில் எண்ணிப்பாருங்கள் அப்படி கோவிலை நிர்வகிப்பாரோ பிரசாரகரோ சுவாமியோ அந்தணரோ இருக்கிறாரோ? அப்படி உண்மையாம்படி தெளிய நீர்காட்டினால் நாம்சந்திரதீபப்பணியை அன்றுடன் நிறுத்திவிட்டு அப்படி ஒருவரைக் காட்டித்தந்த உங்கள் காலடியில் தாழ்ந்து மன்னிப்புக் கோருவன்

ஆறுமுகநாவலரை ஐந்தாம் குரவர் என்றீர். அவரை நாம் அப்படி அல்ல ஐந்தாம் குரவர் அன்று அவர்செம்மை வெண்ணீற்று ஒருமைப்பாட்டை சீர்குலைத்தபாவி என்றே சொல்வேன், ஆறுமுகநாவலர் இராமலிங்கசுவாமிகள் பாடலைமருட்பா என்றதும் அவரைத் தூக்கிப்பிடித்து பெரிதாகக் காட்டிய பண்டிதமணி என சைவத்தவநெறி அறியாத பாதகர் போற்றிய பாதகன் சி கணபதிப்பிள்ளையும் இராமலிங்கசுவாமிகளை என்னவாறு நாவலன் எனத்தான் எழுதிய நூலில் அவதூறு செய்தான், இராமலிங்கசுவாமிகள் எங்காகிலும் யாரையும அவதூறு தம் பாடலில் செய்தாரா?

திருநீற்றின் ஒருமைப்பாடு முதல் உணர்ந்தவரே சைவத்தில் திருநீற்றை வளர்த்திட முடியும். அதைஉணராது நீறு அணிந்து சிவன் திருவடி பாடும் அன்பரை அவதூறு செய்து அவர்பாடலை அவதூறு செய்து அவரைகௌரவிக்கக் கூடாது என்று எல்லாம் மேடையில் பேசலாமோ?

உலகில் திருநீறு அணிவார் சிவநெறிக்கு ஒவ்வாதன அதாவது காசுக்காக பிரசங்கம் வேடிக்கை சிவனை வைத்து காசுபெறப்பாடுதல் தருமம் அற்றவகை பிறர் வேதனைப்பட உரக்க ஒலிபெருக்கியில் பாடி ஊரடங்கக் கத்தி சிவநெறியில்! தம்தவநெறி வதமோது தியானம் பாவனை தபம்செபம் வைமுதல் வழிபாடு செய்வார் வருந்த பல பாதங்களைப் புரிவனா நீவிர் தவறு கின்றீர் எனக் கடிந்தாதல் சொல்வத்திருந்தவகை செய்தல் உண்மையில் சிவன் திருநீற்றை வளர்ப்பதாகும்.

இதைவிடுத்து தவறு களைக்காண் பிபாது திருநீறு அணிவார் செய்யும் பாதகச்செயல் அதனை மறைப்பதெனின் அதை நன்று என்று சொல்ல முடியாது. நாவலர் செய்த பலபணி இருப்பினும் திருநீற்றின் ஒருமைப்பாட்டில் செய்த தவறு மன்னிக்க முடியாத குற்றம் இதை அவரை பெரிதாக மதிப்பார் உணர வேண்டும்.

இந்தப் பாடலிலே மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் சீலத்தால் உயர்ந்த வகைகளை பெரியபுராணம் மிகத்தெளிவுபெற இன்னமும் விளக்கிக்காட்டுகிறது. மங்கையர்க்கரசியாரை பெரியபுராணயம் எங்கள்தெய்வம் என்றபோது ஒருபெண் அதுவும் பாண்டிநாட்டின் பட்டத்துத் தேவி தெய்வமாதல் எப்படி எனசிந்தித்துப் பாருங்கள். ஒருபெண் தெய்வமாதற்கும் மனிதர்க்கும் யாதுவித்தியாசம்? இதைஉணரவேண்டுமே? பெண்களாயிருந்து படித்து பண்டிதையாகி ஆசிரியையாகி விட்டால் மேடையில் இலக்கணமாக பேசிவிட்டால் அவர்கடவுளாகிவிடுவாரா? கடவுள் தன்மையுடையபெண் எப்படி இருப்பாள் என்பதை சம்பந்தர் இத்தேவாரத்து நயம்பெற மொழிகின்றார் அந்தப்பெண்ணினுடைய கோலமே தெய்வமாகப் பேசப்படுகின்றது.

செய்யும்பணி அடக்கம் நோன்மை பதிவிசுவாசம் கபடமற்றகொள்கை பத்திமையாவும் பேசப்படுகின்றது. இதைச்சிவத்தமிழ் எனபட்டம் சூட்டிப்பதைக்கூத்தாடும் சண்டாளர்க்கும் கொலைகாரருக்கும் காடையர்க்கும் விளங்காது.

சண்டாளன் கொலைஞன் காடை இவர்கள் மேடைப்பேச்சிற்கு கைதட்டிதுள்ளிக் குதிக்கலாம். ஆனால் ஒருவருடைய உள்ளத்திறன் அருள்நிலை எவ்வாறுஎன உணரமாட்டான்.

சீலமில்லாத பாவிகள் சீலத்தை எவ்வாறு உணரலாம். சீலமுடையவர்க்குத்தான் சீலத்தின் உண்மையும் பொய்மையும் புலப்படும். பெரியபுராணம் சிவனடியார்களை சீலமெய்தொண்டரென குறிப்பிடுகின்றது பொதுவாக எல்லாரையும் அடியவராக்கவில்லை.

இதனை குலச்சிறையாரைச் சிறப்பிக்க வந்த சம்பந்தர் தெளிவாகக் காட்டுகிறார். குலச்சிறையாரைச் சிறப்பிக்கும் பாடல்களைப் நோக்கி இதன் உண்மையை உணருங்கள்.

சீலமுடையவர் காலத்தை வெல்வார் மரணம் அவர்க்கில்லை, சீலத்தையே சிவன் விரும்புவான். சீலம்தான் பெரிதும் உகப்பான் சிவன் என்கின்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

முருகப்பெருமானும் தனக்கு சீலத்தையே உபதேசித்தார் என்றும் தனதுகுருநாதன் சொன்ன சீலத்தை யாது எனமெல்லத் தெளிந்து அறிவார் சிவயோகிகள் அவரே காலத்தை வென்று இருப்பார், மரிப்பார் வெறும் கர்மிகளே என கந்தர் அலங்காரத்தில் சொல்கின்றார் அருணகிரிநாதர்.

அருணகிரி நாதர் முதல் பெரியோர் உண்மையை இப்படிக் கூறிட அதையே சம்பந்தரும் கீழாக தந்துள்ள தேவாரப்பதிகத்து தெளிவாகக்கூற அதை உணர்ந்து தெளியாது அல்லது தாங்கள் தவநெறியினை கடைப்பிடித்து ஒழுகி அதன் நிலைமை இப்படி என அறியாது, ஏதோ அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைத்தால் அது அடைதற்கரிய பேறுஎன தம்மையே சாலவும் மதிக்கும் பாவிகள் இன்று உலகறிய என் செய்திருக்கிறார்கள்?

ஓர் எழுத்தாளரை பேச்சாளரை அல்லது பிரசங்கியை அவர் கடவுள் சரித்திரம் பிரசங்கம் வடிவாகச் செய்தால் அல்லது கடவுள்பெயரில் கட்டுரை சிறப்பாக எழுதினால் சில சைவ நூல்கள் அச்சிட்டால் அவரின் அந்த ஒரு செயலை மட்டும் பெரிதாகக் கொண்டு அவரை குரவர் என்று செல்லி சுவாமி என்று கூறி பெரும் விழா எடுக்கின்றனர்.

எழுத்து பேச்சு இவைகளைக் கொண்டு நாம் ஒருவரை சீலமுடையவர் இவர் என சொல்ல முடியாது. மது அருந்துவோர் விய பிசாரி குரோத மனமுடையவர் கொலைஞர் பலரும் நல்ல பாடகராக பேச்சாளராக கடவுள் பேரில் பாடல் இயற்றுவோராக இருக்கின்றனர். இதனாலே இவர்களது நிலையை சீலமும் உடையவர் என்று சொல்லலாமோ?

காமம் குரோதம் கோபம் லோபம் மதம் மாற்சரியம் (வியப்பு) முதல் அறுவகை குணங்களையும் நீக்கி இந்திரியங்களின் போக்கைத் தடுத்து நிறுத்தியவரே உண்மையான சைவ சீலம் உடையவர். இதில் ஒன்றை மட்டும் நீக்கி ஏனையவைகளை உடையவரை நாம் சீலம் உடைய பெரியார் என சொல்ல இயலாது. இவர்கள் யாவரும் மரிக்கும் வெறும் கர்மிகள்.

மரிக்கும் வெறும் கர்மிகளை ஐந்தாம்குரவர் என்றும் கிறிஸ்தவ கலாச்சாரத்தில் மூழ்கி சைவப்பெண்களை ஆண்களாக்கும் ஒருபெண்ணை சிவத்தமிழ் துர்க்கா துரந்தரி சிவமயசெல்வி என்று திருநீற்றின் மகிமையும் சிவனருளின் சிறப்பும் ஒழுக்கமும் தெரியாத பாதகபலசரக்கு வியாபாரிகளும் தங்கள் இடமாற்றத்திற்கு மாநிலக் கல்வி அதிகாரியை கடவுள் எனக் கும்பிடும் சண்டாளச் சட்டம்பிமாரும் சொன்னால் அதை அறிவு கூர்ந்து உண்மை தெரிந்த சிவனடியார் என்னாக நினைப்பார்.

நாம் இதை இந்த குறிப்பிடுவது சாமி என ஆறுமுகநாவலர் சிவத்தமிழ் முன்னர் இருட்டுச்சந்தை வியாபாரத்தில் உச்சநிலையை பலவழியிலும் மாற்றாது மனத்தை சிவசீலவழிசெலுத்த மாட்டாது இருப்பார் தம் முன்புள்ள வியாபாரம் போலவே சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சிரித்துச்சிமிட்டி திருவாசகவிழா திருமுறைவிழா சிவபூசை மகாநாடு வைத்திட இவர்பேதமை கண்டு இளம் சந்ததியினர் முற்றாகவே திருவருளின் உண்மைமறந்து சைவ நெறியிலும் காடைத்தனம் கடைப்புளித்தனம் கொலைமுதலியன செய்துபொய் பல சொல்லி பெரியோரை இகழ்ந்து தவம் செய்வது கேலிக்குரியது வேண்டாதது என்றதாக எண்ணி, பல பாதகம் செய்தாலும் 89 அடி கோபுரம் கட்டுவது அல்லது திருவிழா 8 ஒலிபெருக்கி பிடித்து செய்வது சரி என நினைத்து இன்று நடந்துவரும் நிலையில் இந்த இளைஞர் சமுதாயத்திற்கு இன்று நீங்கள் பேணுவது போலிச் சைவம் உண்மை அன்று. உண்மை விளக்க முடைய சைவம் தவத்தின் நெறியுடையது என்று ஆலயங்கள் யாவற்றிலும் தவநெறியை வளர்க்க முன்வாருங்கள் எனக் காட்டுவதற்கே யாகும்

## திரு ஆலவாய்

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

**மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மடமானி**
**பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்**
**பொங்கழல் உருவன் பூத நாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி**
**அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவா யாவதும் இதுவே**

மங்கையர்க்கு அரசி என்னும் நாமம் உடையவள். சோழ அரசர்க்கு அரசனானவன் பெற்றெடுத்த ஓர் பாவையின் இயல்பான நலம் உடையவள் வரிஉடைய வளைகள் நிறைய அணிந்து சிறந்த கைகளுடன் கபடம் அறியாத மானின் தன்மை போல்பவள். தாமரை மீது இருக்கும் இலக்குமி யானவள். பாண்டிய அரசனின் பெரும் தேவியாயவள். (பாண்டிநாட்டின் பட்டத்து அரசி என்னலுமாகும்) எம்பிரார்க்கு வேண்டிய பணிவிடைகள் செய்து நாள்தோறும் சென்று போற்றி செய்து வர பொங்கி எழும் நெருப்பின் சுடர்போலும் சிவந்த உருவுடையவன் பூதங்களுக்கு நாயகன் நான்கு வேதங்களையும் அதற்குரிய உண்மைப்பொருள்களையும் உலக அருளின் பொருட்டு தாமாக அருள் செய்து அழகிய கயல் மீனைப் போலும் கண் உடைய மீனாட்சி அம்மையாருடன் எம்பிரான் சிவன் தங்கி இருக்கின்ற திருவாலவாய்என்னும் கோயில் இதுதானே!

(இப்பாடல் வந்த வரலாறு)

மதுரைச் சோம சுந்தரக்கடவுள் அருள் பெருக சங்கத் தலைவனாக இருந்து தமிழ் வளர்த்த பாண்டிநாடு தனது நலம்குன்றி வஞ்சனைமிகுந்த சமணருடைய ஆட்சியில் திரு நீற்றின் சிறப்பு நீங்கி இருந்தது. குலச்சிறை பாண்டிமா தேவி மங்கையர்க்கரசி இருவரிடத்து மட்டுமே சைவம் சென்று தங்கியது, இவர் தவப்பேற்றால் மீண்டும் சைவம் தழைத்தோங்கிட சம்பந்தசுவாமிகள் மதுரைக்கு வருகிறார்.

மதுரைக்குச் செல்லும் சம்பந்தசுவாமிகளை குலச்சிறை நாயனார் நகர வாய்தலில் சென்று வரவேற்கின்றார். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் ஏவலின் படியே மந்திரி குலச்சிறையார் வாய்தலில் வரவேற்கச் சென்றவர். தமது வாழ்வு வருகின்றது என மங்கையர்க்கரசியார் தாமும் அரசனிடம் கோவில் வணங்கச் செல்வதாகக் கூறி தாமும் தன் குலாசார முறைப்படி சென்று திருஆலவாய்ப் பெருமானை வணங்கி சம்பந்தப்பெருமான் அங்கு முதல் வருவார் ஆதலின் தாமும் நல்வரவேற்று நின்றார்.

அவ்வாறு இவர்கள் அகமலர்ந்து நகரவாய்தலிலும் சோலையிலும் நிற்ப திருநிலவிய முத்தின் சிவிகை மேலாக எம்பிரான் சம்பந்தரை சேவித்து வரும் நிலவுடைய பூரண சந்திரனைப்போன்று முத்துக் குடை ஒன்று சிவிகைக்கு நிழல் செய்திட பெருகும் ஒளி உடைய திருநீறு அணிந்த சிவனடியார் கூட்டம் சூழ்ந்து வர எங்கும் அருள் பெருக வரும் ஞானத்தின் அ[illegible] சம்பந்தர் மதுரை [illegible]ன்றார்.

வரும் அவர்முன்பாக முழங்கிடும் துந்துபி முதலாய வாத்தியங்களின் ஓசை மேற்படாதபடி அந்தணராகும் முனிவர்கள் ஓதிடும் ஆயிரம ஆயிரமாகப் பெருகும் வேதங்கள் ஓசை செய்திட எப்புறத்தாலும் வந்து எழுகின்ற மங்கல நாதங்கள் திசை எல்லாவற்றையும் தன் உட்பட முழங்கிட, செந்தமிழின் மணம் கலந்த சுவைமிக்க இனிய தென்றல்காற்று அதுவும் சம்பந்த சுவாமிகளினது எப்புறமும் தானும் குளிர்தூங்க வீசி சேவகம் செய்திட.

வஞ்சனை உடைய தவம் பாண்டிநாட்டில் பலர் செய்தலால் அந்த வஞ்சனை கலந்த தவத்தினால் விளைந்த பாவம் பாண்டிநாட்டில் எண்ணற்ற கொடுமை விளைந்த சமணரை உண்டாக்கி அவர் மூலமாக பாண்டிநாட்டில் பாவமே பெருகப் பெருக பரந்தது. இந்தப்பாவத்தின் விளைவாக வரும் கொடுமை நீங்கிட இந்தப்பூமி அல்லாது வானஉலகமும் செய்த புண்ணியத்தின் படைஎழுச்சி பாண்டிநாட்டில் பரந்த பாவ இருளை அகற்றிடவருகின்றது எனும்படி எம்பிரான் சம்பந்தருடைய வருகை பொலிவு எய்திட

அதுவன்றி சமணர்கள் தங்கள் உடலினில் கொண்ட அழுக்கால் மனதில் கொண்ட பொறாமை வஞ்சனையால் அழுக்கையே பெருக்கி விட்டனர் இதனை கழுவி நீக்கிட வெண்மை ஒளியாலும் தூய்மையாலும் கங்காநதி பாண்டி நாட்டில் வருகின்றது என அழகு பொலிவுற சம்பந்தசுவாமிகளின் வருகை கவின் காட்ட.

தமிழ்வளர்த்த சிறப்பால் தமிழ்நாடு என உலகம் போற்றும் பாண்டி நாடு அவச்செய்கையால் சமணரது வஞ்சனையால் இருளாகிட அந்தஇருளை நீக்கிடவரும்ஞானமணி விளக்கு எனும் படியும் எம்பிரான் சம்பந்தர் வருகை நலம்சிறந்திட.

பாண்டிநாடுமுன்செய்த தவப்பயன் இன்று பலன்பெற்றிடவும் என்றும் மனித குலத்தை உய்விக்கும் சைவநெறி தழைத்திடவும் அதற்கான பலஓசை தரும சின்னமலரம் பரசமயகோளரி வந்தான் எனஊத

இந்த புண்ணியத்தின் வசமான அற்புத வருகையின் சிறப்பைநேரில் கண்டு பரவச நிலையான குலச்சிறையார் நிலமிசைத்தாழ்ந்து வணங்கிட அவர் நேர்வந்த சம்பந்தப்பெருமான் அவரைத்திருக் கரம் தொட்டுஎடுத்திட எழுந்து பலகால் குலச்சிறைபணிந்து விம்மிஅழுது வாய்குளறி காணப்பெற்றதின தனதுபேற்றால்மலர்ந்து முன்னிற்ப அவருடன் உரையாடும் சம்பந்தர் திருவாலவாய்க் கோயில் எம்மருங்கு என அலர்காட்டக்கண்டு பாடிய திருப்பதிகம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியும்**
**கொற்றவன் தனக்கு மந்திரியாய குலச்சிறை குலாவிநின் றேத்தும்**
**ஒற்றைவெள் விடையன் உம்பரார்தலைவன் உலகினில் இயற்கையை யொழிந்திட்டு**
**அற்றவர்க் கற்ற சிவனுறைகின்ற ஆலவா யாவதும் இதுவே.**

சிவன் அடியார்களைக் கண்டால் ஏதும்வேறு சிந்தை செயாது அவர் பாதகங்களில் வணங்கவீழும் விருப்பம் உடையன், வெள்ளைநிறமுடைய திருநீறு அணியும் விதியுடைய பாண்டிய அரசனுக்கு மந்திரியாய் இருக்கும் குலச்சிறை கண்டதும் பரவசநிலையடைநது நின்றுபோற்றும் ஒற்றை வெள்ளை இடபம்உடைவன்; தேவர் எல்லார்க்கும் தலைவன், உலகத்தில் இயற்கையாக எழும் எண்ணங்களை நீக்கிவிட்டு எல்லாப்பற்றையும் அசற்றிய பெரியோர்க்கு எய்தும் படியான சிவன் உறைகின்ற ருதி ஆலவாய் என்னும்தலம்இதுவே.

அடியார்களைக் கண்டால் நன்மை தீமை உணராது அடிமத் திறம் ஒன்றே நோக்கி அவர் திருவடிகளில் வீழும் விருப்பத்தை குலச்சிறையார் என்றும் உடையவர் ஆதலின் வெற்றவே அடியார் அடி மிசைவீழும் விருப்பினன் என்றார்.

பாண்டிய அரசன் சமணை நீக்கியும் திருநீறு அணியுப் விதி பெற்றுக் கொள்கின்றான் என்றதால் வெள்ளைநீறு அணியும் கொற்றவன் எனதிருவருள் நிலைஉணர்ந்து மொழிகின்றார்.

திருவால வாய்க் கோவிலைக் கண்டபோது குலச்சிறை மேகங் கண்டமயில் போல் உள்ள மலர்ச்சி இயல்பில் பெற்று குலாவி பணிந்து நிற்பார் என்றதால் குலாவிநின்று ஏத்தும் என்றார்.

உலகினில் இயற்க்கை என்பது மண்ஆசை பொன் ஆசை பெண்ஆசை புகழாசை வாகனம் வீடு இவற்றில் சௌகரியம் பெறஎண்ணுதலாகும் இவற்றால் நீங்கமுடியாது. அழகிய பெண்ணைக் கண்டதும் மனம்எழுச்சி இயல்பில் வருகிறது. நன்றுகவிளையும் பூமியை காணியைக்கண்டதும் அதிலும் விருப்பு தானக இயல்பில்வருகிறது. காசைக் கண்டாலும்மனம் இயல்பில் நாடுகிறது புகழ் படைத்தவனாக வரவேண்டும் என்பதும் இயல்பே. ஆதலின் இனவ இயல்பாதலின் இந்தஇயல்பான இயற்கையை ஒழிந்திட்டுஎன்றார்.

அடுத்து சிவனடியார் எல்லாப்பற்றையும் நீக்கியவர் பசி காமம் கவலைபிணி இல்லாதவர் ஆதலின் அற்றவர் எனப்பட்டது. இப்படியான நிலையில் உள்ளார்க்கே சிவன் அமைவார் ஆதலின் அற்றவர்க் கற்ற சிவன் என்றார். தனதுபெருமை அறிய மாட்டாத கடவுள் என்றதால் அற்ற சிவன் எனப்பட்டது.

**செந்துவர் வாயாள் சேலன கண்ணாள் சிவன்திரு நீற்றினை வளர்க்கும்**
**பந்தணை விரலாள் பாண்டிமாதேவி பணிசெயப் பாரிடை நிலவும்**
**சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந்தண் எருக் கம்மலர்வன்னி**
**அந்திவான் மதிசேர் சடைமுடி அண்ணல் ஆலவா யாவதும் இதுவே.**

3, சிவந்த பவளம்போலும் வாய்உடையவள், சேல்மீனை ஒத்தகண் உடையவள் சிவன் அணியும் திருநீற்றின் சார்பாய அன்பு அருள் இனவபெருக உலகில் திருநீறு அணியும் பேற்றை மக்கள்பெற பணிபுரியும் பந்து அணையும் சிறந்தவிரல்உடையவள். பாண்டிய அரசனின் பெரும் பட்டத்து தேவியானவள் நித்லும் சென்று வழிபட்டு பணி செய்ய இந்தப் பூமி இடத்தாக விளக்கும் ஒளியின் சீருடைய முத்து பாம்பு கங்கை நீர் ஊமத்தமலர் குளிர்ந்த எருக்கலம்பூ வன்னி கொன்றை மாலைக் காலத்து இளம்பிறை சேருகின்ற சடை முடிஉடைய அண்ணல் எம் சிவமூர்த்தி அமர்ந்த திரு ஆலவாயாவதும் இதுவே!

சிவன் அணியும் திருநீறு சிறந்தது செம்மை யாவது இதை அணிவார் செம்மை பெறுவாராதலின் அதை பிறர் அணியச் செய்தல் இறைவனுக்குச்செய்யும் தொண்டாவது நீற்றுநெறிக்குரியன அன்பு அருள் என்றதால் இவை பெருக அரசாளுதல் மிகச் சிறந்தது, எனவே சிவன் திருநீற்றை வளர்க்கும் பந்தணை விரலாள் என்றது பந்தாடல் பெண் கட்குரிய ஆடல்'

**கணங்களாய் வரினுந் தமியராய் வரினும் அடியவர் தங்களைக் கண்டால்**
**குணங்கொடு பணியும்குலச்சிறை குலாவுங் கோபுரஞ் சூழ்மணிக்கோயில்**
**மணங்கமழ் கொன்றை வாளரா மதியம் வன்னிவன் கூவிள மாலை**
**அணங்குவீற் றிருந்த சடைமுடி அண்ணல் ஆலவா யாவதும் இதுவே.**

4. அடியார்கள் கூட்டமாக வரினும் தனித்து ஒருவராய் வரினும் சிவ னடியார் தங்களைக் கண்டால் சிறந்த குணங்கொண்டு பணிகின்ற குலச்சிறையார் கண்டு மகிந்து நின்று பணிபுரியும் கோபுரம் சூழ்ந்த அழகிய கோயில் என்று வாசனை விளங்குகின்ற கொன்றைப்பூ வாள்போலும் பல் உடைய பாம்பு இளம் பிறை வன்னி நல்ல வில்வ மாலை யாவும் பொருந்திக் காண்பார் உள்ளம் பரவசமாகும்படி வீற்றிருந்த சடைமுடி உடைய எம் தலைவன் சிவன் அமர்ந்திருந்த திருவாலவாய் என்னும் கோயிலும் இதுவேயாகும்,

அடியார்கள் குலமே நோக்கினரன்றி ஒருவரோ தனிபாரோ அடிமைத்தனம் பேசுகிறார்

**செய்யதா மரைமேல் அன்னமேயனைய சேயிழை திருநுதற்செல்வி**
**பையரவல்குற் பாண்டிமாதேவி நாடொறும் பணிந்தினி தேத்த**
**வெய்யவேற் சூலம் பாசம்அங் குசமான் விரிகதிர் மழுவுடன் தரித்த**
**ஐயனார் உமையோ டின்புறுகின்ற ஆலவா யாவதும் இதுவே.**

5 செம்மையான தாமரைமலர் மேல் வீற்றிருக்கும் அன்னப்பறவையின் வனப்புடன் ஒத்திருப்பவள் நன்கு திருந்திய ஆபரணங்களுடைய வளாய் இலக்குமிகரம் பொருந்திய சீரிய நெற்றி உடைய செல்வியாகிப் படமுடையபாம்பின்தலை போன்ற அல்குலுடன் எல்லாம் சிறந்த நலமுடைய பாண்டிய அரசன்பத்தினி பட்டத்துப் பெருந்தேவி நாள்தோறும் சென்று பணிந்துஇனிதே போற்ற கொடிய சூழவேலும்பாசமும் அங்குசமும் மான் கன்றும் விரிந்த கதிர் உடைய மழுவாயுதமும் தரித்த திருக்கரங்களுடன் எம்ஐயனார் உமையோடு இன்புறுகின்ற ஆலவாய் என்னும் தலமும் இதுவே,

பாண்டிமாதேவி பணி செய்தலும் அவளுடைய இயல்பும் பேசினார் தாமரைமலர் மேல் அன்னம் பிறர் காண்டற் கரியது. பிற பறவையின் சேர்க்கை விரும்பாது. இப்படி எத்தனையோ ஏனைய பறவைகள் போல் அல்லாது தனித்த பண்பு உண்டு, ஆதலால் இதைப் போல் பாண்டிமா தேவியும் சைவத்தின் தவச் சிறப்பிற்கு தனித்த பெருமை கொண்டதால் செய்ய தாமரை மேல் அன்னமே அனைய சேயிழை என்றார். திருநுதற் செல்வி என்றது நெற்றியின் இலக்குமி கரம். அத்தகைய நெற்றி உடையோர் ஏனைய பெண்கள் போல் இலாமையின் திருநுதல் செல்வி என பாண்டிமா தேவியின் பெண் உறுப்பின் நலன்கள் சொன்னவாறு,

**நலமில ராக நலமதுண்டாக நாடவர் நாடறிகின்ற**
**குலமில ராகக் குலமதுன்டாகத் தவம்பணி குலச்சிறை பரவும்**
**கலைமலி கரத்தன் மூவிலை வேலன் கரிஉரி மூடிய கண்டன்**
**அலைமலி புனல்சேர் சடைமுடி அண்ணல் ஆலவா யாவதும் இதுவே.**

திருநீறு அணியும் அடியார்கள் நலம் இல்லாதவராக இருப்பினும் அல்லது நலம் உடையவராக இருப்பினும் அல்லது நாட்டில் உள்ளவர்கள் உயர்ந்தசாதி தாழ்ந்தசாதி என பகுத்து அறிகின்ற நற்குலத்தில் தோன்றியவராக அல்லது அத்தகைய குலத்தில் உதித்த குலத்தின் பெருமை உடையவராக இருந்தாலும் ஒருவர் தாம் சிவனுக்காக வாழ்வு நடத்தும் தவம் உடையவர் எனக் காணப்பெற்றால் அத்தகையோருடைய குலம் சாதி பிறப்பு பெருமை சிறுமை செல்வம் வறுமை முதலியவற்றினைக் கொண்டு வித்தியாசம் பாராட்டாது அவர்பால் பொருந்திக் கொண்ட தவத்தினைப் பணியும் குலச்சிறை நாள்தோறும் போற்றிடும் மான் கன்று பொருந்திய கரம் உடையவன், மூன்று சுடர்உடைய சூலப் படையை உடன் யானைத்தோலால் மூடப்பெற்ற கண்ட முடையவன் அலைகள் மிகுந்த நீராய கங்கையை சடைமீது முடியாகக் கொண்ட எம் புண்ணியன் சிவமூர்த்தி தங்கிய திருவால வாயக் கோவிலும் இதுவாகும்.

தவம்பணிதலை இங்கு குலச்சிறையாரின் விசேட அம்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பேசப்படுகின்றது உண்மை தவம் செய்வார் எக்கோலத்தில். இருப்பினும் அவர் தவநெறியின் உண்மை தெளிவார் குலச்சிறை என்றதால் நல மிலராக நலம துண்டாக நாடவர் நாடறிகின் ற குலமிலராகக் குலமதுண்டாக த் தவம்பணிகுலச்சிறை என்றூர்

முத்தின்தாழ் வடமுஞ் சந்தனக் குழம்பும் நீறுந்தன் மார்பினின்முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமாதேவி பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே சுடர்மர கதம்அடுத் தாற்போல்
அத்தனுர் உமையோ டின்புறுகின்ற ஆலவா யாவதும் இதுவே.

7. முத்தினுல் செய்ய பெற்று விளங்கிடும் தாழ்ந்து தூங்தம் பெரும் மாலையும் சந்தனக் குழம்பும் திருநீறும் தனது மார்பில் பொலிந்து விளங்கிட பத்தியால் நிறைந்து பரவசமாகிப் பணியும் பாண்டிமாதேவி பெண்மையின் சிறப்பிற் குற்ற பாங் கொடுபணி செய்திட என்றும் நிலவிநிற்கும் பெருவாழ்வு அருளுடன் பொருந்திக் கொண்டவராய் சுத்தம் நிலவுகின்ற பளிங்கினுல் செய்த பெருமலை உடனே ஒளிவிடும் மரகதப்பச்சை மலை ஒன்று அடுத்து நின்றுல் போல் எம்பிரனுர் உமை அம்மையாருடன் இன்புற்று இருக்கின்ற ஆலவாய் என்னும் கோயிலும் இதுவாகும்.

திருவாலவாயில் ஈசன் அங்குமங்கயர்க்கரசியாரின் பாங்குடைய பணிஏற்று அருள்புரியும் தெய்வக் காட்சி இப்பாடலில் பேசப்படுகின்றது. அருளால்நிறைந்த பளிங்கு மலை அருகே ஒளியால் பச்சை நிலவு தரும் மரகதமணியின் மலைபோல் சக்தியுடன் கூடசிவன் நின்றவாறு,

காணப்படும் பசுமையின் அழகுள் ஒளிவெண்மையாக நின்றது. இவை மறை ஞானஞான முனிவன் கோயில் சேர முன்பே தனது தூயஉள்ளத்தில் கண்டு தெளிந்த வகையால் சொல்கின்றூர். பத்தியார் கின்ற பாண்டிமாதேவிஎன மங்கயர்க்கரசியாரின் குணம் எடுத்துப் பேசி அந்தப் பத்திக்கு விளைவாக முத்தின் தாழ் வடம் சந்தனம் திருநீறு மார்பில் விளங்கிட என்கிறூர். மார்பைக் குறித்து நெஞ்சில் கபடம் குரோதம் முதல் களைகள்யாவும் நீக்கப்பெற்றதே காரணமாகிறது. நீறு எல்லா தீங்கு டைய எண்ணத்தையும் நீக்குவது சந்தனம் தண்ணளி மிகுந்தது தருமம் தயை இவற்றினை எடுத்துக் காட்டுதலால் சந்தனம் மார்பில் நிறையப் பூசப்பெறுவது. ஆதலினுல் தூயசிந்தை நெஞ்சில் பெறதிருநீறும் சந்தனமும் அணிந்தசிறப்பு எடுத்து ஓதினுர்.

தருமம் கபடமற்ற சிந்தை உடையவரே பக்தியுடைய வராக இருப்பார். அல்லாதார்க்கு பத்துவாது சிவனும் பத்திமையில் வருவான். பத்திமலர் தூவமுத்தி எளிதாமே என்கிறூர் பிறிதோர் பதிகத்து. சிவனை மாணிக்க வாசகரும் பத்தி வலையில் படுவோன் காண்க என்கிறூர்.

எனவே பத்தி ஆர்கின்றுபாண்டிமா தேவி பாங்கொடுபணி செய்தலால் திருவால வாயில் சிவன் உமையுடன் நின்றன் என்று அவருடைய தோற்றம் பளிங்கின் மலையுடன் அடுத்த மரகத மலைபோல் ஆயது என்று தம் அகக்கண்ணுல் கண்டமை கூறுகின்றூர். ஆகவே கோயில் எவ்வளவு புனிதமுடையதுஎன உணர்க.

நாவணங் கியல்பாம் அஞ்செழுத் தோதி நல்லராய் நல்இயல் பாகும்
கோவணம் பூதி சாதனங் கண்டால் தொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங் கியல்பாம் இராவணன் திண்டோள் இருபதும் நெரிதர வூன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி அண்ணல் ஆலவாயாவதும் இதுவே,

8. நாவால் வணங்குதற்கு இயல்பான முறையுடைய ஐந்தெழுத்து மந்திரம் ஓதி நல்ல இயல்பு உடையவராய் இருக்கும் நிலையுடன் சிவனடியார்கள் விரும்பி அணியும் கோவண ஆடை திருநீறு அணிதல் கருணையின் குறியான உருத்திராக்கம் இவையும் இவற்றுடன சிவனுக்கு அன்பராய் இருக்கும் தாகமுடைய குணங்கள் காணப்பெற்ற அத்தகையோரை உடன் தொழுது வணங்கி எழும் குலச்சிறையார் போற்றி செய இறுமாப்பு மிகுந்தஇயல்புடை இராவணனது திண்மையுடைய தோள்கள் இருபதும் நெரிந்திட திருப்பெருவிரலால் ஊன்றி அவனது செடுதல்களைப் போக்கி அவனைந் தனக்கு ஆளாக்கிக் கொண்டசடைமுடி உடைய அண்ணலின் திரு ஆலவாய் ஆவதும் இதுவே;

நாவின் வணக்கத்திற்கு ஐந்தெழுத்து ஓதல் நலமுடையது. சிவனடியார் ஏமாற்றம்வஞ்சனை வீண்பொழுது போக்கு வீணருடன் உறவு வீண்வார்த்தைபேசல் நக்கல்செய்தல் கசட்டுக்தனம் பணவாஞ்சை இவை இல்லாதிருபதால் நல்லவராய் நல்லியல்பாகும் கோவணம் பூதி சாதனம் என்பது மெய்ப் பாடு எனவும் கொளள நின்றது, அவரது உரை உடை அணிகலம் யாவும் சிவசாதனமாக அமைந்திருப்பக் கண்டால் உடன்சென்று தொழுது எழுகுலச்சிறை என்றவாறு;

ஓர் மந்திரிதன் மேன்மை உணராது அடியார் குணம் குறி பரவும் நிலமை பேசினுர்.

மண்ணெலாம் நிகழ மன்னனுய் மன்னும் மனிமுடிச்சோழன் தன்மகளாம்
பண்ணினேர் மொழியாள் பான்டிமாதேவி பாங்கினுற் பணிசெய்து பரவ
விண்ணுளார் இருவர் கீழொடு மேலும் அளப்பரி தாம்வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புறு கின்ற ஆலவா யாவதும் இதுவே,

9 இந்த மண்ணிலான பூமி எல்லாம் சிறப்புடன் நிகழ அரசனுய் இருக்கும் மணிமுடி தரித்த சோழ அரசனுடைய மகளாகும் பண்ணின் இனிமை யினை ஒத்த மொழி பேசுபவள். பாண்டிய அரசனின் பெருந்தேவியானவள் மங்கையர்க் கரசி தனக்குற்ற பாங்குடன் நித்தலும் சிவனுக்கு உற்ற பணிகள் செய்து போற்றிட விண்ணில் உள்ள கடவுளர் இருவர் பிரமனும் திருமாலும், பிரமன் அன்னப் பறவையாகி மேல் பறந்தும் திருமால் பன்றிவடிவாகி கீழ் நோக்கிச் சென்றும் இருவரும் அளந்திட முடியாதபடி நின்ற எம் அண்ணலார் சிவமூர்த்தி உமை அம்மையாருடன் இன் புற்றிருக்கின்ற திரு ஆலவாய்த் தலமும் இதுவே.

இந்தப் பூமி தனக்குரிய சிறப்புடன் விளங்க வேண்டுமெனில் அதற்குரிய அரசாட்சி புரிந்திட ஓர் அரசன் வேண்டும். அந்த அரசன் புண்ணிய விளக்கம் உடையவனுக இருப்பது அவசியம். இந்த சோழ அரசன் ஓர் அரசர்க்குரிய சிறப்பு எல்லாம் உடையவனுக இருப்பது குறிப்பிடத் தக்கது. இத்தகைய நெறி உடைய அரசனுல் பூமி என்றும் நலம் சிறந்து ஓங்கிடும். பஞ்சம் பசி கள்ளர் பயம் பகை வேற்று நாட்டு ஆதிக்கம் இவை இடம் பெறது. இதனை விளக்கிடவே மண்ணெலாம் நிகழ மன்னனுய் மன்னும் மணிமுடிச் சோழன் என்றூர். சிவநெறி அரசில் பொல்லாப்பு இல்லை.

தொண்டரா யுள்ளார் திசைதிசை தோறுந்தொழுதுதன் குணத்தினைக்குலாவக்
கண்டுநா டோறும் இன்புறுகின்ற குலச்சிறை கருதிநின் றேத்தக்
குண்டரா யுள்ளார் சாக்கியர் தங்கள் குறியின்கண் நெறியிடைவாரா
அண்டநா யகன்தான் அமர்ந்து வீற்றிருந்த ஆலவா யாவதும் இதுவே.

10. எம்பிரானுக்கு தொண்டராய் உள்ளார்கள் பல பல திசை தோறும் தொழுது தனது நற்குணத்தினைப் போற்றிட அதுகண்டு நாடொறும் இன்புறுகின்ற குலசிச்றை தன் நலம் இன்னும் பெருக அருள் புரியும் ஆலவாய் ஈசனை அருள்கருதி நின்று போற்றிட சமணராய் உள்ளாரும் புத்தராய் உள்ளாரும் சொல்கின்ற குறிகளிடத்து அல்லது அவர் காட்டும் நெறியிடத்து வராது தேவர்கட்கு நாயகன் சிவன் தான் அமர்ந்து வீற்றிருந்த திரு ஆலவாய் ஆவதும் இதுவே.

குலச்கிறையார் கடைப்பிடித்த அன்பு நெறியும் அருள்நெறியும். அகில உலகத்துள்ள சிவதொண்டுபுரிவார்க்கு தெரிதலினுல் அவருடைய சீலத்தை தமக்குச்சைவநெறியின் எல்லையாக வைத்து பேசுதலும் தொழுதலும் ஆக விளங்கியது. அடியார் தாம்கடைப்பிடித்த சீலத்தைப் போற்றல் கண்டு குலச்சிறை இன்புறு பேசப் பட்டது குலச்சிறையார் அநுட்டித்த நெறிகளை நாமும் பின்பற்றல் நலம். இன்றைய நிலையில் தொண்டு காசாக மாறினுல் ஒருவருடைய குணம் என்னுகும் என்பதைச் சிந்தியுங்கள்.

பன்னலம் புணரும் பாண்டிமாதேவி குலச்சிறை யெனு மிவர் பணியும்
அன்னலம் பெறுசீர் ஆலவா யீசன் திருவடி யாங்காவை போற்றி
கன்னலம் பெரிய காழியுள் ஞான சம்பந்தன் செந்தமி ழிவை கொண்டு
இன்னலம் பாட வல்லவர் இமையோர் ஏத்தவீற்றிருப்பவர் இனிதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11, பல நலன்கள் எல்லாம் தாமாகச் சென்று அடைந்து கொண்ட பாண்டிய அரசனின் மாதேவி மங்கையர்க்கரசி குலச்சிறை எனும் இவர்கள் பணி செய்திட அத்தகைய இவருடைய பணிகளையும் தாம் பெறுவதற்கு தகுந்த அந்நலம் பொருந்திய சீருடைய திருவாலவாயில் அமர்ந்த சிவன் திருவடிகளைப் போற்றி செய்து கல்வியின் நலம் பெரிதும் உடைய சீகாழியுள் ஞானசம்பந்தன் பாடிய இவைகளை ஏற்றுக்கொண்டு இனிய நலமுடன் பாட வல்லார்கள் தேவர்கள் போற்றிட வீற்றிருப்பார்கள்'

ஞானசம்பந்தருடைய பாடல் குலச்சிறை மங்கையர்க்கரசியாரைப் புகழ்வது எனினும் அவை அருளால் நிகழ்ந்த அமுதம் போல்வது, அது மட்டன்றி செந்தமிழாவது. ஆனபடியால் இவைகளை நலமுடன் கொள்க என்று மொழிகின்றார். இன்னலம் பாடவல்லவர் என்றது பாடுபவர் தம்மில்நலமுடையராய் பாடுக என்றதாகும்.

காசு பெறப்பாடுதல் றேட்பேசிப் பாடுதல் பட்டம் பெறல் இவையாவும் இன்னலம் பாடல் என்றதாக எண்ண முடியாது.

இன்று ஓதுவா மூர்த்திகள் என தம்மைக் கூறிக் கொண்டு தகாத செயல்களைச் செய்து கொண்டு வஞ்சனை பொறாமை அகங்காரம் இவற்றால் பீடிக்கப் பட்டு காசு பெற்று பண்இசைக் கச்சேரி வைத்து கோயிலில் மேடை மீதிருந்து பாடி மக்களை மகிழ்விக்கின்றேன் எனப் பாடும் அவர்களை இன்னலம் பாட வல்லவர் எனச் சொல்ல முடியாது. இவர்கள் தன் பாட்டின் நலம் காட்டப்பாடுபவர்களே

நான் அறிந்த மட்டில் ஓதுவா மூர்த்தி ஓர் ஆதீனத்தைச் சேர்ந்தவர் பாடல் பெற்றதலத்தில் தேவாரம் சொல்ல நியமிக்கப்பட்டார் அவர் சிகரட் புகைப்பவர். அவர் ஒருநாள் வெளியில் வந்து சிகரட் புகை பிடித்துக் கொண்டிருக்க உள்ளே தேவாரம் சொல்ல அழைக்கப் பட்டபோது வாய்கூடக் கழுவாது ஓடிப்போன செய்தியை நேரில் கண்டவர் சொன்னார். இவர்களை எப்படி இன்னலம் பாடுபவர் எனக் கொள்வது, அல்லது இப்படியான இவர்களை தேவர் சென்று வணங்குவாரோ?

பண்நலம் புணரும் பாண்டிமாதேவி என்றது தீயன யாவும் சென்று சேராது நல்லன எல்லாம் தாமாகச் சென்று சேர்ந்ததைத் தெரிவிக்கின்றார், குலச்சிறையாரிடத்தும் அவ்வண்ணமே யாகும். தீங்கு என்பவை சிந்தையில் எக்காலமும் சென்றுசேரா வகை இருப்பவர்

பன்னலம் என்றது அன்பு அருள் தீங்கு புரிவாரைக் காணச்சகியாமை கொடை இவை போன்ற பலவாகும் இத்தகைய நலன்கள் பொருந்துபவர் புண்ணியர். ஆதலினால் ஓர் ஆலயத்தை புண்ணியர் சென்று வழிபடுதலால் அந்நலம் ஆலயத்தை தவ நெறியில் சிறக்கவைத்து மேலோங்கிடச் செய்யும்.

சைவ நெறியில் பாடல்பெற்ற தலம் என்று விசேடமாகக் கருதப்படுவது திருஞான சம்பந்தர் முதல்புண்ணியர் அந்நாள் இறைவனைப் பாடியருள்வதால் எழுந்ததாகும்.

ஒருவரிடம் புண்ணியம் எப்படிவரும் என்பது கேள்வி? புண்ணியர் ஒருவரை ஏமாற்றிட மனம் கொள்வாரோ? வஞ்சனை செய்வாரோ? தீங்குபுரிவாரோ? தகாதன செய்வாரோ? அவை நடவாது. ஆதலால் அத்தகைய புண்ணியத்தின் நலம் பொருந்தியவர் கோயில் சென்றுவழிபடல் அங்குள்ள கடவுளுக்கே ஒரு நலமாகும்.

பலபாவிகள் மேடைபோட்டு திருவிழாச் செய்ய சண்டாளப் பிராமணன் ஏமாற்றிக் காசு பறித்து ஒழுங்கற்ற வகை பூசை செய்ய அங்கு கடவுள் இருப்பரோ

பொக்கமிக்கவர் பூவும்நீரும் கண்டு நக்குநிற்பன் நாணி அவர் தமையே என திருநாவுக்கரசர் மொழிகின்றார். அதன் கருத்து தனது தூய நெறிகளை மாற்றி வேறு நெறிகளை புகுத்துவாரது பொய்மையின் செயலைக் கண்டு இறைவன் சிரித்துக் கொண்டுநிற்பார், அதுமட்டன்றி நாணி அவர்தமையே என்று கூறுவதால் பொய் பிராமணன் செயயும் பூசை ஒருபோதும் ஏற்கப்படமாட்டாது என்பது வெளிப் படை. அங்கு கடவுள் இரார் இந்தச் சண்டாளன் பூசைபண்ணச் செல்ல இருந்த கடவுளும் எழுந்து ஓடிவிடும்.

நாட்டிலோ அல்லது கோயிலிலோ தகாதசெயல் உண்மை அன்பர்க்கு நிகழ்த்தினால் அத்தெய்வம் அக்கோயிலால் அகன்று விடும் என்பதற்கு சான்றாக திருவிளையாடற் புராணத்து சரித்திரம் ஒன்று தெரிவிக்கின்றது

எனவே கோவிலில் தொண்டு செய்வார் அனைவரும் பலநலமும் உடையவரானால் அது கடவுளுக்கே நன்று. குடம் குடமாக பாலால் அபிடேகம் செய்வதிலும் நலமுடைய ஒருவர் திகூட்டி மெழுகி விளக்கிட்டால் அது மிகமிக நன்று.

எமதுசைவக் கோவில் நிர்வாகம் பலவும் இந்த உண்மைகளை நன்குதெளிய வேண்டும். இன்றைய நிலையில் எமது இலங்கை நகரில் உள்ள பிராமணர்களில் பெரும் பாலோர் நலம் கெட்டவர்.

3 இந்தப்பாதகர் பூசைசெய்யும் கோவிலில் ஒருபோதும் அருள் இருக்காது. நாங்கள் இதற்கு என்ன செய்யலாம்? இந்தச் சண்டாளப் பிராமண சமுதாயத்து பீடித் திருக்கும் பழிபாவம் இவை நீங்கி என்று இனி நலம் சேருமோ தெரியாது.

இன்றைய நிலையில் இதை உணர்ந்து இனிஉண்மை தெரியும் தாகமுடை அடியவர்கள் தத்தமது இயல்பில் ஏதோ தாம் அறிந்தவகை ஒரு குறியை நாட்டி அதைசிவன் எனபாவித்து பூநீர் பால் தயிர் நெய் இவற்றால் நீராட்டி தூபம் தீபம் திருஅமுது இவைகொண்டு பூசித்து தருமம் தவம் இவற்றுடன் தமது வாழ்வைக்கலந்து பொய்யை அகற்றி யார்க்கும் வஞ்சனை செய்யாது வாழ்வார்க்கு சிவன் தோன்றுவார்.

வருவார் வருவார் வரம்தருவார்! சுவாமி வஞ்சம் பொறாமை கோபம் நெஞ்சினில் நீ வையாதே எனயோக சுவாமிகள் உறுதிபெறதமது நற்சிந்தனையில் மொழிகின்றார்.

ஆகவே பன்னலம் புணரும் பாண்டிமாதேவி குலச்சிறை எவ்வாறு இருந்திருப்பார்? அவர் நலன்கள் எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்கள் தெரியுங்கள் சைவநெறியில் நல்ஒழுக்கம் தான் சிறந்தது என உணரவேண்டும்.

# ஏகமாம் சிவமெஞ்ஞானம் உணர்த்தும் ஈச உபநிடதம் தருவன

சென்ற இதழ் தொடர்ச்சி

## ஆறுவது மந்திரம்

9 புத்திசாலியான மனிதன் தனது ஆத்மாவிலே எல்லாப் பொருளையும் கண்டுகொள்வான். தனது ஆத்மாவையே எல்லாப் பொருளிலும் கண்டுகொள்வான். ஆன இந்தக்காரணத்தால் அவன் எவர் ஒருவரையும் வெறுக்கான்.

குறிப்பு—செம்மை வெண்நீற்று ஒருமையினார் என்று ஆன்மஞானிகளான அந்தணரை பெரிய புராணம் கூறுகிறது. இந்தஒருமைப் பாட்டில் யாரை யார் வெறுப்பது, அனைத்துயிரும் நீயே தப்பி அதை அறிந்து நடந்திடா வினைப் பகையை வென்றிடடா வேறுபொருள் இல்லையடா என்கிறார் யோகசுவாமிகள். சகத்து எவ்வளவு அகத்து அவ்வளவு அதுதெரியவேண்டும் எனக்குடைச்சாமி எனும் கந்தையாச்சாமியார் என்பவர் ஒரு நாள் என்னிடம் கூறினார். கற்கலாம் கேட்கலாம் கண்ணாரக் காணலாம் முற்றுடம்பால் ஆய பயன் அது என ஔவைப் பிராட்டியும் மொழிந்தவாறு நினைக்கவேண்டும். எத்தனை டெலிவிசன் காட்ட முடியாததை நமது உடம்பில் நாமே காணலாம். யோகசுவாமிகள் இருந்த இடத்தில் எல்லாம் பார்ப்போம் எனக் கூறுகின்றார். தன்னுளே சகமும் சகத்துளே நானும் பின்னமற்று இருக்கும் பெருமையும் கண்டேன் என்கின்றார் இன்னுமொரு ஞானி.

இதை ஒருவர் பெறற்கு துணிவு வேண்டும் அந்தத் துணிவுதான் துறவுஎனப் படுவது, இதையே புத்திசாலி எனக் குறிப்பிட்ட தன்மை காண்க. சம்பந்தர் தமது தேவாரத்தில் இயற்கையை ஒழிந்திட்டு அற்றவர் எனக்குறிப்பிடுதல் காணக.

## ஏழாவது மந்திரம்

7. உண்மையைக் காண் பாருக்கு எல்லாப் பொருளும் தானாகவேக காணப்படுவது, அப்படியாயின் என்ன மயக்கம் என்ன துக்கம் இவைகளான துயர்கள் எப்பொருளும் ஒன்றான அந்த உண்மையைக்கண்டு கொண்டார்க்கு எய்துமோ?

குறிப்பு—தானான தன்மை தனையடைந்த மாதவர்கள் வானுதிமாயைகளால் வாடுவரோ? எனயோக சுவாமிகள் கூறிடுகின்றார். சிவமதையே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பாவம் அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் உவமையிலாக்கலைஞானம் சம்பந்தர் பாலுடன் சேரப பெற்றுக் கொண்டார் எனபெரிய புராணம் கூறி பின்னரும் எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும் அப் பொருள் தான் ஆளுடைய அடியார்கள் எனும் அறவும் பெற்றுக்கொண்டார், இப்படியான உண்மை இதைஉணர்ந்தால் இன்று வஞ்சனை குரோதம் முதல் மன அழுக்குடையார் செயல்களை துப்புர வில்லார் துணிவு துகள்என எண்ணினார் சம்பந்தர் எனவும் சொல்கிறது பெரியபுராணம் இத்தன

இந்த உண்மையை உணர்ந்த ஞானி பொய்சொல்வானோ பேதையக்களை கோவில் வாய்தலில் பாராட்டுவானோ ஏமாற்றுவானோ பிறர்சொத்திற்கு ஆசைப் படுவானோ என்பதை சிந்திபுங்கள், வஞ்சனை பொறாமை கோபம் இவையாவும் இந்தத்தூய ஏகமாம் சிவமெஞ்ஞான உண்மை நிலையைக் கெடுப்பன ஆதலினால் புத்திசாலி கபடம் வஞ்சனை கரவு பகை புகழ்விருப்பம் அனைத்தையும் நீக்கி உண்மை நிலையைப் பெற்றபின் அவனுக்கு துன்பம் கவலை பிறப்பு இறப்பு எனும் மயக்கங்கள் எய்தாது

## எட்டாவது மந்திரம்

8 எல்லாம் வல்லகடவுள் சிவனே எல்லாப் பொருளிலும் இருக்கிறான் அவனே ஒளியானவன் பிரகாசமுடையவன், உருவம் இல்லாதவன். ஏதுமொரு மறுவில்லாதவன் குறைவிலாதவன் தூய்மையானவன் தீங்கு என்றும் இல்லாதவன். தீமை எந்நிலையிலும் சென்று தாக்கப்படாதவன் அவனேஎல்லாம் காண்கின்றான். என்றும்உள்ள நித்தியன் கற்பனைக்கு எட்டாதவன். பிறப் பிலாதவன் தான் பிறிதொரு பொருளில் தோன்றாதவன். அவனே உலகில் உள்ளான படைத்தல் காத்தல் அழித்தல் இன்னும் இன்னும் பல்வேறு தொழில்களையும் செய்வதற்கு உரிய உருத்திரர்கட்கு அருள் கொடுப்பவன்'

குறிப்பு—பரம் பொருளாவதே ஒளி உடையது மிகவும் பிரகாசமுடையது. இதனை "செஞ்சுடர் அநந்தகோடி சேர்ந்து ஒருங்கு உதித்தது என்ன விஞ்சிய கதிர் கான்றுள்ளவியன் பெருவடிவம்" எனக் கந்தபுராணம் தெரிவிக்கின்ற . இதனை எம்குருபரன் ஆறுமுகப் பெருமான் சூரபன்மனுக்கு வெளிப்படக் காட்டிய வகை கந்தபுராணம் பேசுகிறது. அதில் அற்புதமாக கச்சியப்பர் சொல்லுகின்றார். எப்பொருளையும் தன்னுள் அடக்கி காண்பித்ததும் அன்றி எப்பொருளிலும் தான் உண்டு எனக் காண்பித்ததும் அங்கு பேசப்படுகிறது. எல்லாத் தேவரும் தத்தம் தொழில் புரிநீதிட அநுக்கிரகம் செயதவாறு நின்றநிலை காண்பிக்கப் பட்டது. சுருங்கச் சொன்னால் கந்தபுராணவிசுவ ரூபதரிசனம் மேல் கூறிய சுலோகத்தின் அடிப்படையாதல் உணரலாம். இதுவன்றி அருணகிரியாரும் தன்னந்தனி நின்றதுதான் அறிய இன்னம் ஒருவர்க்கு இசைவிப்பதுவோ எனக்கூறுவதும் உணர்க, இப்படி உண்மைகளை அறியுங்கள்

## ஒன்பதாவது மந்திரம்

9.குருடன் இருட்டில் இருப்பது போல இருப்பர் அசட்டுக் கிரியைகளைப் புரிந்து அறியாமையில் சிக்கி இருக்கும் மக்கள். இதைவிட இன்னும் பெரிய இருளில் சிக்குவார்கள் தமது திறமையை எண்ணிக் கருமம் புரிவோர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு...அசட்டுக் கிரியை என்பது கிரியை செய்யும் போது வேத நெறி அற்ற ஏமாற்றம் ஒலி பெருக்கி வானொலி அஞ்சல் ஒலிப்பதிவு நாடா இவற்றைப் பாவிப்பதாகும். இதனை அருணகிரியார் சளத்திற் பிணிபட்டு அசட்டுக்கிரியையில் தவிக்கும் எனதன் உள்ளத்தில் பிரமத்தைத் தவிர்ப்பாய் என்கின்றார். கிரியா பாகங்களால் நாம் அடைவது அருள். இதை உணராது அசட்டுத்தனம் பல புரிவோர் பிரசாரம் விளம்பரம் ஏமாற்றுப் பொருள் இவை பாவித்துக் கொள்வோர் இவர்களையே குருடன் இட்டில் இருப்பார் எனக் கூறியமையாகும். தூய்மையுடன் கிரியை செய்வோர் என்றும் விளம்பரம் விலாசம் இவற்றில் மனங் காள்ளார் இன்றைய சண்டாளப் பிராமணாகள் இதை உணர்வாரோ? கல்வி என்பதுநன்று. ஆனால்கல்வியின் பெருமையை எண்ணி பட்டங்களுடன் விளங்குவார் ஒருபோதும் உண்மை காணார், மாணிக்கவாசகர் இதனைக்கல்வி என்னும் பலகடல் பிழைத்தும் புல்வரம் பாயபலந்ரை பிழைத்தும் எனகல்வியால் பெற்ற அறிவு உண்மையை உணரவிடாது கற்றேன் என்ற அகந்தையுடன் காணப்பட்டால். முன்சொன்னகுருடனுடைய இருளிலும் இதுஇன்னும் பெரிய இருளில் சேர்க்கும் எனப்பட்டது. இதனை இன்றைய பிரசாரகர் ஆரும் உணர்வாரோ?

## பத்தாவது மந்திரம்

10. ஓங்காரியம் அவர்கள் சொல்கின்றனர் அறிவு மூலம் பெற்றது எனவும் அடுத்தது அறியாமை மூலம் பெற்றது என்றவகையாக. இப்படியாக நாம் எமக்குப் போதித்த அறிவாளிகளிடமிருந்து இதனைக்கேட்டுள்ளோம்.

குறிப்பு— முன்கூறிய கல்வியால் விளையும் அறிவையும் அடுத்து அறியாமையால் விளையும் கிரியாபாகங்களையும் குறித்தது. இதனை அருணகிரியார் அறிவும அறியாமையும் கடந்த அறிவு திருமேனி என உணர்ந்து உன் அருணசரணார விந்த மென்று பெறுவேனோ என்றவை காண்க. அறிவிற்கறிவாகி அவ்வறிவிற் கெட்டா நெறியில் செறிந்த நிலை எனக் குமரகுருபரர் சொல்வார். அறிவுக்கறிவாகி அப்பாலுக்கப்பாலாய் செறியும் முருகன் திருவடிகள் என்கின்றார் யோகசுவாமிகள். இதன் தாற்பரியங்களை நாம்உணர்தல் நன்று. அருமையாகக்கிடைத்தபிறவியில் உண்மைதெளிதல் நன்றாகும். சோவில்களைப் பற்றி குறைகூறுகிறேன் என நம்மைக்குறை சொல்வார் ஈச உபநிடதம் கண்டு நாம் சரியென தெளியாரோ.

# திருவாசகம் செய்த மணிவாசகர் வெட்கப் பெருவாசகம் பேசுகிறாராம் வடமாநிலக் கல்வி அதிகாரி மாணிக்கவாசகர்

## தவநெறியின் உயர்வு அறியாத பேதை ஆசிரிய உலகின் கவித்திறன்கள்! இதைஏற்ற சைவமரபு எனத்தமை கூறும் மாநில அதிகாரியின் மாண்பு என்னே! புண்ணியமா பொருளா பெரிது?

ஊருக்கு ஒருபேரை வாங்கித் தருவது ஒரு பாடசாலை. ஆனால் பாடசாலை சண்டாளச் சட்டம்பிமாரிடம் சிக்கினால் அது ஊரைமட்டுமன்றி மாணவரையும் முற்றாகக் கெடுத்துவிடும் என்பது இன்றைய இளைஞருடைய விபரீதப்போக்கு ஒரு காரணமாகக் கொள்ளலாம்.

ஊரெழுக்கணேச வித்தியாசாலை ஓர் மணிமண்டபம் கட்டியது. அதைத் திறப்பதற்கு ஒரு விழாஎடுத்தது. திறப்புவிழா நடக்கும்போது அது ஒரு மங்கலத்திறப்பு விழாவாக்கி அதற்கு வருகைதர வடமாநில கல்வி அதிகாரி மாணிக்கவாசகரை அழைத்தது. மாணிக்கவாசகர் வருகையில் அவர்க்கு ஒருபாராட்டுக்பரிசாக பாமாலை ஒன்று தயாரித்து அளித்தது. அதை சந்திரகை உரும்பராய் என்ற புனைபெயரில் யாதது மசணிக்கவாசகருக்கு வாசித்துக் காட்டிக் கொடுத்தது.

அதல் ஒரு வெண்பா 12 தற்கால விருத்தப் பாடலுமாக உள்ளன. அந்தப்பாடலில் 3 வது பாடலில் ''திருவாசகம் செய்த மணிவாசகன் வெட்கப்பெருவாசகம பெசும் மணிவாசகனே திரு மாணிக்கவாசகரே' என்று பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாராட்டிக்கொடுத்தது பரிசுப் பாமாலை. அருமை அருமை என்று விழாவில் கலந்துகொண்ட மக்கள் கைதட்டி இருப்பர் எனநம்புகிறோம். மாணிக்கவாசகர் என்நிலையானார்என்பது எனக்குத்தெரியாது. இந்தநிலையில் மந்திரிபதவியை விடுத்தோடிய திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரும் ஐயோ நான் ஏன் அன்று மந்திரி பதவியை விடுத்து ஓடினேன், இங்குபார் இலங்கையில் வடமாநிலத்து கல்வி அதிகாரியை என்னிலும் உயர்வாக பெருவாசகம் பேசுகிறார் என்று வடமாநிலத்தில் ஊரெழு கணேச வித்தியாசாலை சொல்கின்றதே. சிவனே இதென்ன விந்தை எனக்கதறி அழுதிருப்பாரோ தெரியாது.

ஊரெல்லாம் என்னைப்பெரிதாகச் சொல்ல ஊரெழு மட்டும் வடமாநில கல்வி அதிகாரியை என்னிலும் பெரிதாகச் சொன்னால் நான் இனி ஒருகால் தென்னிலங்கை வடமா நிலத்தில் சென்று கல்வி அதிகாரியாகப் பிறக்க அருள்தா எனக் கேட்பாரோ தெரியாது.

நமது ஆசிரிய சமூகம் ஆண் பெண் என்று இருபாலாருள் இந்தப் பாராட்டைக் கண்டு பெண்கள் நிபந்தனைகளில் ஆண்கள் புனைதுரைகளில் தத்தம் விருப்பத்துக் கிணங்கிய பாடசாலைக்கு மாற்றலாகும் வழிகளை இதுகாறும் கையாண்டு வருவதிலும் இந்த வகை ஒருபாராட்டுப் பரிசுப் பாமாலை மாணிக்கவாசகரே நல்லூர்க்கந்தனிலும் எமக்குக் கிருபை செய்வதில் மேம்பாடுடையீர் எனச் சொல்லி முன்புள்ள வகையில் உடல் வேதனைப்பட்டு ஓடித்திரியாது தங்கள் குறைகளை நிவர்த்தி செய்வார்கள் என நம்புகிறோம்.

ஏனெனில் கல்வி அதிகாரி மாணிக்கவாசகரை திருவாசக மணிவாசகர் வெட்க பெரு வாசகம் பேசுவார் என விளித்து முகமன் சொல்லியதின் காரணம் அவரால் தங்கள் பாடசாலையை மகா வித்தியாலமாக்க வேண்டிக் கொள்வதற்கே ஆகும். ஆசிரியப்பெண்கள் சிக்கலான இடமாற்றங்களில் தாம் போய்ச் சிக்காது ஒருபாட்டுடன் சிக்கலைச் சீர் செய்யலாமே.

உண்மையில் சைவ நெறி ஆசிரிய சமுதாயம் தங்கள் சேவை நீடிப்பு பதவி உயர்வு வசதியான பாடசாலைக்கு ஓர் இடமாற்றம் இவை கட்கு நம் சமயத்தை ஓர் கருவியாக்கி வருவதை நாம்தவறு என்றே சொல்ல வேண்டும்

இந்தவகையில் ஆறுமுகநாவலரை ஐந்தாம் குரவர் என்றும் தங்கம்மவை சிவத்தமிழ்ச்செல்வி மங்கையர்க்கரசியாரிலும் மேம்பட்டவர் என்றும் கூறி சைவநெறியின் தலைமைப்பாட்டை மிக மிகக் கீழாக்கி உள்ளனர்.

வேறு எந்தச்சமயத்திலாவது தமது குரவர் களிலும் மேலாக சாதாரண மனிதரை உயர்த்திப்பேசலோ ஒப்பிட்டுப் பேசவோ இல்லையே இல்லை. பிறசமயத்து யாரொருவரேனும் இயேசுவில் மேலாக புத்தர் மேலாக தியாகம் செய்வார் நபிகள் நாண உபதேசம் செய்வார் என்று தற்கால மனிதரை உயர்த்திச்சொன்னதை நாம் இதுவரை கேள்விப் பட்டதுமில்லை. இந்த ஒருபேதைத்தனம் எங்கள் சைவ மக்களிடை மட்டும் தான் நிரம்பி வழிகின்றது.

இதை சண்டாளராகும் சைவ ஆசிரிய சமூகமே முன்நின்று செய்கின்றது. இந்தப்பாவிகளை ஆதரித்து ஆமோதித்து நிற்கிறார் சைவநெறியில் சித்தாந்தம் பேசும் பாவி பண்டிதமணி கண பதிப்பிள்ளையும் அவரது பரிவாரப்பண்டிதரும்.

ஐயோ இந்தப் பாவிகளுடன் இணைந்து இலங்கை வானொலியின் சைவத் துறையாளரும் எமது சைவநெறியின் தவச்சார்புகளைவேரோடு சிதைத்து வானொலியில் வீரமுடன் பேசினால் அது தான் சைவம் வளர்ப்பு என்று நிற்கிறார்கள், இலங்கை வானொலி சைவப்பகுதியினர் கும்பாபிசேகங்களை அஞ்சல் செய்யச் சென்று கும்பாபிசேக நியதிகளைச் சீர் குலைத்து தவ நெறிகளை மாசுபடுத்தி கடவுட்குச் செய்ய வேண்டிய புனிதங்களை விலக்கி தம்வானொலியில் தமது கிரியை செய்யும் சிறப்பை காண்பிக்க முன்னிற்கும் படி சண்டாளராகும் பிராமணர்களை வழிநடத்துகிறார்கள்

ஒரு கும்பாபிசேகம் அதற்குரிய நியதியுடன் இருக்க வேண்டுமெனில் அங்கு ஆசாரியாரன அந்தணர் தனது சிந்தையை எவ்வளவு புனிதமான நிலையில் வைத்திருக்க வேண்டும் என்பதை விளங்கினால் அத்தகைய புனிதமுடைய அந்தணர் தான் தூய்மையுடன் பேணிவழிபடும் பிரதான கும்பம் யாகஞ்செய்யும் குண்டம் யாகசாலை இவற்றின் அருகாமையில் ஒலி பெருக்கும் கருவியோ வானொலி அஞ்சல் கருவியோ இருப்பதை விரும்பார். உண்மை விளங்கும் அந்தணர்க்கு இதன் தூய்மை நன்குவிளங்கும். கும்பாபிசேக நியதிகளின் அருள் நிலைபற்றி நான் இங்கு எழுதிக்காட்ட முடியாது. அது அருள் வழி ஒழுகி சீலம் தவறாது வாழ்கின்ற சிவப்பிராமணர்க்கு விளங்கும். இன்றையஒலிபெருக்கி வானொலிச் சண்டாளப் பிராமணிகட்கு விளங்காது,

ஒலி பெருக்கி வானொலி இவற்றை நாம் புனிதமுடன ஒழுகி உள்ளும் புறமும் தூய்மையாகி விரத சீலராய் நின்று அருள் பெறும் வகையில் கடவுளைத் தமது கும்பத்தில் அக்கினியில் வழிபடும் அந்தணர் விரும்பார், அது அப்படி உள்ளதாயின் இன்றுள்ள பிராமணரின் நிலையை நாம் கருதுவதானால் சிறு பான்மையினர் கோயில் புறத்துள்ள தொண்டா எனறு சொல்லி கோயில் உட்பிரவேசம் செய்யாது வெளியில் நின்ற மக்களிலும இந்தப் பிராமணர் கீழமைப பட்டவரே! இத்தகைய பிராமணர் ஆலயத்தில் மூர்த்திக்கு பூசை புரிவதிலும் சாதாரண மனிதர் பூசை புரிதல் நன்று என மிகத்தெளிவுடன் இங்கு குறிப்பு காண்பிக்கிறேன்.

இதை இங்கு நான் குறிப்பிட வேண்டி வந்ததின் காரணம் யாது என்றால் ஒருகும்பாபிசேக புனிதத்தை அதன் அருள் சிறப்பை அதன் புண்ணியவசத்தை தவச்சார்பை உணரமாட்டாத சண்டாளப் பிராமணன்கள் எவ்வாறு மந்திரம் சொல்லும் தன் சாமர்த்தியத்தை ஊருக்கும் உலகிற்கும் சொலிக்காட்டலே கும்பாபிசேகம் எனநினைக்கிறானோ அதுபோன்றே இந்த சண்டாளராகும் ஆசிரியரும் பண்டிதமணியும் அவரது பரிவாரங்களும் சாதாரண மனிதனை நாயன்மாரிலும் மேலாக கணிக்கின்றார்கள் அவ்வாறு கவிகளும் செய்கிறார். இத்தகையஒரு பேதமை நிறைந்த கவியை வடமாநிலக் கல்வியதிகாரி மாணிக்கவாசகர் ஏற்றுக் கொண்டார் என்றால் அவரும இத அறிவற்ற சண்டாளராகும் சைவ ஆசிரியரும் ஒருநிலையிற்தான் உள்ளனர் என்றே நினைய வேண்டும்.

மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் என்ற முது மொழிக்கிணங்க ஒருவித்தியாசாலையை தரம் உயர்த்த வேண்டின் ஒரு பெரியவரின் உயர்வை கீழ் இறக்கி அவதூறு செய்து அந்தப்பாடசாலை தரம் உயர்த்தப் படுதலிலும் உயர்த்தப் படாமல் இருத்தல் மிக நன்று, அதுவும் கணேசவித்தியாசாலை என்ற பெயருடன் விளங்கி சைவ பாடசாலையாக இருந்து சைவத்தின் நாலுகுரவரில் ஒருவராகும் மாணிக்கவாசகர் வெட்கபெருவாசகம் பேசும் வடமானிலக்கல்வி அதிகாரி மாணிக்கவாசகர் என்றபோது அதை ஏற்றுக்கொண்டிருந்த வடமானிலக்கல்வி அதிகாரி மாணிக்கவாசகர் அது தவறான கூற்று என்றுதல் மொழிந்திருக்க வேண்டும். அல்லது தனது பதில் உரையில் இதை சுட்டிக்காண்பித்திருக்க வேண்டும். பாராட்டுப் பரிசுப் பாமாலையில் மாணிக்கவாசகர் புத்தூர் மழவராயர் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும் சைவ மரபில் உள்ளவர் என்றும் கூறப்படுகிறது, ஆனால் என்னால் அதை நம்ப முடியவில்லை ஏனெனில்உண்மையான சைவர் குடும்பத்தை சேர்ந்தவர் இத்தகையபரிசுப் பாமாலையை ஒருபோதும் ஏற்கார்,

வடமானிலக் கல்வி அதிகா சைவத்தில் இந்த ஒருநிலையை உருவாக்கி அதனை ஏற்றுக்கொண்டு இருந்தால் இனிமேல் சைவ சீலத்தில முத்திநிலை அடைந்த பெரியார்களின் வரலாறு என்னாகப்போகின்றது என்றகவலைய மிகுகின்றது. இன்று நமது நாட்டில் சில பாடசாலைகளில் சமயகுரவர் குருபூசை என்று கொண்டாட்டம் வைப்பார்கள். ஆனால் சமயகுரவர் யார் எப்படி அவரதுசீலம் என்றதே விளங்காமல் திண்டாட்டமுடனே வைக்கிறார்கள். இதனால்நமது இளம் சந்ததியினர் சமயகுரவர் செய்த அருட்பணி சீலம் விளங்காது சைவம் என்றால் விழாவும்பாரட்டும் பொன்னாடையும் பூமாலையும் என்ற நிலையில் உணரத் தலைப்படுகின்றனர்;

மாணிக்கவாசக சுவாமிகள் தபதுபாடலை சிவன் அருளுடன் கலந்து எழுந்த மொழியாகும் எனதமது திருக்கோவையார் பாடல் ஒன்றில் ''நினைவித்துத் தன்னை நெஞ்சத்து இருந்து புனைவித்த ஈசன்'' என்கின்றார்.

இந்தவகையில் பெருவாசகமும் அமைந்ததோ? சைவ ஆசிரிய சமூகமே சிந்தியுங்கள்.

உண்டு உடுத்து மகிழ்வதற்கு பயன் பெறவே உபரகள் கவிகள் செய்யும் சைவநாச காரிகளான ஆசிரியசமூகத்தை நான் என்சொல்வேன? தமக்கு ஓர் சேவைநீடிப்பு பதவி உயர்வு தரம்உயர்த்தல் இவற்றிற்கு ஒருவருடைய சாலை வருடவும் தயாரான்றது சைவஆசிரிய உலகம். இதே மாதிரிப் பேதமைகள் ஊரெழுப்பாடசாலையுடன் நிற்கவில்லை. இன்னும்பல உண்டு. தம்தம பெருமைக் களவாகிய சால்புகட்டு கீழ் நோக்கும் இவர்கள் என்று நன்மை உணர்வாரோ? திருவாசகம் செய்த மாணிக்க வாசகரையும் திருவாசகம் என்னும்தேனையும் விடுத்து பெருவாசகம் மானில கல்விஅதிகாரி பேசுதலையும் மக்கள் அறியட்டும்.

நம் நாட்டில் திருவாசக மணிகள் பல உண்டு. திருவாசக மகாநாடு பல நடந்தது. ஆனால் இவர்யார்க்கும் திருவாசக நெறி தெரியுமோ? என்பதே சந்தேகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறி நேயர்கள் கோவில்களிலும் சிவநெறிக்குரிய அறநிலையங்களிலும் நடப்பவை பற்றி தெரிவிப்பன

## கும்பாபிசேஷம் செய்யச் சென்ற மெடோர்ண் குரு சவம்காவும் சாரதியானர்

யாழ்ப்பாணம்

உயர் திரு நல்லையா அவர்களுக்கு நாம் எழுதிக்கொள்வது. முதற் கண் தங்களுக்கு எங்கள் அன்பான ஆசிகள் என்றும் நிலைக்கட்டும். நாம் தங்களின் பத்திரிகை வாசித்து வருவது வழமை. தாங்கள் கட்டாயம் எமக்கு வாரம் ஒரு பத்திரிகை அனுப்பும் படி நாம் கேட்கிறோம், தங்களிடம் நாமும் உதவி புரிவோம். தங்களின் வளற்சி எமது சமயத்திற்கு மேம்பட்டது. ஆனபடியால் தங்களைப் போல் எத்தனையோ பேர் இருந்தால் கட்டாயம் எமது சமயம் வளரும். நாம் சில காலமாக தங்களின் பேப்பர் பார்த்து நாமும் சில பேரை நியமித்து தங்களுக்கு வளர்ச்சி அளிக்க முன்வருவோம்? எமது கந்தோரில் தொழில் புரியும் ஒருவர் கூறினர் நான் திருமலைக்குப் போனேன் அங்கு சிலர் கதைத்தார்கள் ஒரு குருக்கள் கடந்த வாரம் சிங்கப்பூர் சென்றுர் அங்கு ஒரு கோவில் திருவிழா முடித்து விட்டு பின் இலங்கைக்கு வந்தார் 23 1 80 அன்று இரவு கட்டுநாயக்கா விமான நிலயத்தில் இருந்து திருமலைக்கு காரில் சென்றுர் அந்த (மொடேரன்) அவர் சென்று தம்பலகாமம் ஆலயத்தை அடையும் வருவாயில் அந்த கார் சாரதிக்கு திடீரென மாரடைப்பு ஏற்ப்பட்டு விட்டது. உடன் ஆஸ்ப்பத்திரிக்கு விரையும் போது மொடோன் என்றழைக்கும் குருக்கள் கார்ச் சாரதியாக மாறினர் ஆனல் அவரின் பின் ஆசனத்தில் பிணமாக மாறினர் அந்த உண்மையான கார் சாரதி. 24ம திகதி கார்ச்சாரதி திருமலை ஆஸ்ப் பத்ரியில் அவரின் பிணமும் பொலிசில் அவரின் காரும் தடுத்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. 24ந் திகதி காலை (பூர்வாங்க கிரியை) ஆரம்பித்தார் அந்த சிங்கப்பூ குருக்கள். இது தான் 33 குண்டகும்பாஷேகம் இதற்க் காகத் தான் 33 போட்டு செய்யும் பலன்? நாட்டில் அவசகுணம் நாட்டில் கீர்த்தி அசம்பா விதம் இப்படியான கட்டத்தில் ஏற்படாமல் என்ன தான் நடக்கும் இதை நாம் யாரிடம் கேட்பது. யாரிடம் சொல்வது தங்களின் தீபம் தான் விடை கூறும் என்று அவர் கூறினர்.

சுபம்

உண்மையுள்ள
தணிகாசலம் கலைமகள் ரேட்
39 கல்லியங்காடு
யாழ்ப்பாணம்

எல்லாருக்கும் இனிதே விளங்கும் வண்ணம் சைவத் திருமுறைகளில் இருந்தும் மெய்கண்ட சாத்திங்களில் இருந்தும் வேத சிவாகமங்கள், புராணங்கள், உப நிடதங்களில் இருந்தும் அறிய உண்மைகளை அழகாக பிரசுரம் செய்து வருகின்றீர்கள். அது மிகவும் போற்றத் தக்க பணியாகும். நல்லையா அவர்களின் நல்ல பணிகள் நலமே வளரும் வண்ணம் எல்லாம் வல்ல ஈசன் இனிதே கருணை செய்வாராக.

இப்படிக்கு
தங்கள் விசுவாசமுள்ள
பொ. வல்லவாம்பிகா தேவி
ஸ்ரீ மருதடி விநாயகர் கோவில்
வடமட்டுவில்
சாவகச்சேரி

## கும்பிடச் சென்ற மாணவருடன் பிராமணியின் காடைத்தனம்

ஆசிரியர் அவர்கட்கு.

மானிப்பாய்
28. 01. 1980

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோவிலுக்கு வழிபடச் சென்ற இந்துக் கல்லூரி மாணவரும், 7ம் திருவிழா உபயகாரரின் மகனுமாகிய செல்வன் க கரன் பிராமணியால் மிருகத் தனமாக தாக்கப்பட்டு சென்ற கா பொ த பரீட்சையே எழுத முடியாமல் சுகயீன முற்றிருந்தார். இவ்விடயம் சம்பந்தமாக நான் சைவப்பெரியார் திரு மு வயிரமுத்து அவர்களுடன் பிராமணரின் வருங்காலத்தைப் பற்றியும் மாணவரின் தாக்கலின் எதிரொலியும் என்னவாக அமையுமெனக் கேட்டபோது எனது மகனே 3 வருடம் அரசாங்கத்தின் சித்திர வதைக் குள்ளாகி இப்பொழுது நல்லாக இருக்கின்றான். ஏன் கொதிக்கின்றீர் சும்மா இரும் என்றார். முன்பு ஒரு சமயம் சைவப் பெரியாரின் மகனுக்கும் அயல் மாணவனுக்கும் ஏற்பட்ட சிறு சண்டையில் பெரியார் தலைப்போட்டு அம் மாணவனை பொலிசாரில் ஒப்படைத்து அடி வாங்கிக் கொடுப்பதாக பயமுறுத்தினர். சைவப் பெரியாரின் செயல் உனக்கில்லையடா! ஊருக்கு என்றதாய் போய்விட்டது.

செல்வராசா
புளியடிச் சந்தையடி

## அமாவாசையிலும் கோவிலில் திருமணமா?

நீராவியடி
யாழ்ப்பாணம்

தீப ஆசிரியர் அவர்கட்கு
ஐயா.

நான் கொழும்பில் இலங்கை காப்புறுதி கூட்டுஸ்தாபனத்தில் கடமை செய்கிறேன். எனது சொந்த ஊர் நீராவியடி. நான் தினமும் கொழும்பு கொச்சிக்கடை சிவன் கோவிலுக்குப் போவது வழக்கம், அங்கு பிரதான குருக்கள் சிவ ஜீ குஞ்சிதபாதக் குருக்கள் அவர் கடந்த மாதம் மார்கழி மாதத்தில் வரும் அமாவாசையிலன்று எப்படி திருமணம் செய்ய முடியும் அவர் அங்கு மார்கழி மாதம் செய்யலாமா அப்படிச் செய்ய விதி உண்டா? அவர் தன் உழைப்புக்காக செய்கிறுர் ஆனல் அந்தத் தம்பதிகளின் வாழ்க்கைஎப்படி போகின்றது இதை நான் நேரில் கண்டேன். அந்தக் குருக்கள் அப்படிச் செய்தால் மற்ற இளைஞர்கள் பிழை விடுவது தவறு? இதில் என்ன பிழை ஒரு சமயத்தை வளர்ப்பது அந்த அந்த மதகுருமார் அவர்களே. நாள் திதி மாதம் தெரியாமல் குருட்டு நாளில் திருமணம் செய்வது எதற்கு? சம்பாதிக்கவா இப்படிப்பட்ட குருக்கள் மார் எல்லாரும் தலைகீழாகவே நடக்கிறார்கள் இதை யார் யாரிடம் கூறுவது என்பது தெரியாமல் நாம் எமது சமயம் எமது மதம் அலைகிறது. இதை நீங்களாய் நடவடிக்கை எடுக்க வேண்டும் பெரிய குரு எப்படி? மார்கழி மாதம் அமாவாசையில் தாலிக்குப் பூசை செய்து அதை தூக்கி கொடுகலாம்.?

வி நடேசலிங்கம்
பஸேலேஸ் ரோட்
வெள்ளவத்தை
கொழும்பு

## விஞ்ஞான யுகத்தில் மெஞ்ஞானம் உணர்த்தும் சந்திரதீபம்

ஸ்ரீ மருதடி விநாயகப் பெருமான்
திருவருள் முன்னிற்க
மேன்மை தங்கிய நல்லையா
அவர்களுக்கு!
வணக்கம்

தற்போதைய கலியுகத்தில் அதுவும் இருபதாம் நூற்றுண்டில் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழும் விஞ்ஞான யுகத்தில் தாங்கள் மெஞ்ஞான வழியில்

## சந்திரதீபப் பணி யோகசுவாமிகளின் அருளேயாகும் என்கின்றுர்

சிவமயம்

சைவ அபிமானியும் தொண்டனுமாகிய சந்திரதீப ஆசிரியர் திரு நல்லையா அவர்கட்கு அன்புடன் எழுதிக் கொள்வது. தங்களது பத்திரிகையை தொடர்ந்து வாசிப்பவர்களுள் நானும் ஒருவன். 14 12 79 பத்திரிகை வாசித்து மகிழ்ந்தேன் என் நன்றிகள் உரித்தாகுக. ஈச உபநிடதப் பகுதியும் அதில் உங்கள் விளக்கமும் அருமை அருமை. சுந்தரர் தேவாரம் கருத்து அன்பர்களின் கடிதம் பிறவிடயங்கள் எல்லாம் தரமிக்கனவாயும் சைவ சமயங்கட்கு அவசியமான கருத்துக்களாகவும் இருக்கின்றன. ஆனல் யோகர் சுவாமிகளைப் பற்றி ஒரு குறிப்புமே இல்லை. ஒவ்வொரு பத்திரிகைகளிலும் யோகர் சுவாமிகளைப் பற்றிய செய்திகளை வாசிப்பதில் நான் அக்கறை காட்டுவதுண்டு இனிமேல் யோகர்சுவாமிகளைப் பற்றி கட்டாயமாக எழுதுங்கள். இனி வரும் பத்திரிகைகளில் ஏதாவது ஒரு பெரிய புராணப் பாடல் ஏதாவது ஒருதிருக்குறள் என்பன இடம்பெறச் செய்தால் பிரயோசனமாகஇருக்கும். தவறுகளை வேண்டுமென்று செய்யும் அந்தணர்களை மிகக் கடுமையாகக் கண்டிப்பதால் எப்படியாவது அவர்கள் பத்திரிகைக்கு இடைஞ்சல் பண்ணுவரென்றே கருதினேன். திருவருண்டு உளபால் அவர்களது விக்கினங்கள் நீங்குவதையும் உங்கள் பணி வளர்ந்து பயன்படுவதையும் பார்க்கும் போது நாவலரின் பணியும யோகர் சுவாமிகளின் அருளும் உங்கள் பத்திரிகை மூலம் தொடர்ந்து நம் சமூகத்துக்கு நன்மை செய்கின்றன என்றே எண்ணச் செய்கின்றன. நாவலரது சைவப் பணிக்கு பலர் இடையூறு செய்ததையும் யோகர் சுவாமிகள் பலருக்கு அருள் புரிந்து ஈடேற்றிய கதையும் நினைக்கும் போது உங்கள் தொண்டு இறைவனின் ஆசியோடு அமைந்தது என்றும் பிராமணர்களின் பொருளாசையின் மிலேச்சத் தனமும் நிறைந்த கெடுதல்களை நீக்கவே இறைவன் உங்களுக்குள் நின்று உங்களை இப்படியான பத்திரிகை நடத்தச் செய்கின்றுர் என்றும் கருதுகிறேன். உங்கள் பணி எங்கும் பரந்து மேன்மை கொள் சைவ நீதி விளங்கச் செய்க.

இப்படிக்கு அன்பன்
சைவ அபிமானி

## சைவ ஆலயங்களில் திருமணம் நடத்தல் நிறுத்தியமை

### சந்திரதீபத்தின் விடா முயற்சி யாகும் என்கின்றுர் ஒரு அன்பர்

வீரகேசரி 2 2 80ல் இருந்தவை

சைவ ஆலயங்களில் திருமண வைபவங்கள் நடத்தப் படுவதைச் சைவ மக்கள் ஒரு பகுதியினர் எதிர்த்து வருகின்றனர், அவ்விதம் செய்வது சமயத்துக்கு மாறுபட்ட செயல் எனக்கூறி அதற்கான ஆதாரங்களையும் காட்டி வருகின்றுர்கள்

இந்த எதிர்ப்புப் பிரசாரத்தின் பயனாக யாழ்ப்பாணத்திலுள்ள சில முக்கிய சைவாலயங்கள், திருமண வைபவம் நடத்துவதை நிறுத்திக் கொண்டுள்ளன.

மேற்படி புதினம் வீரகேசரியில் பிரசுரமானது. இது உங்கள் சந்திரதீபத்தின் விடா முயற்சி என்றே கூற வேண்டும்.

இப்படிக்கு
உண்மையுள்ள
வே சின்னத்துரை

## சைவ ஆச்சிரமங்கள் தவச்சார்பின் உண்மை நெறிக்கு உயரவேண்டும்

ஓம்

சி நடராசா
7 லோங் வீதி
நுவரெலியா

அறியாமையிருளிற் சிக்கி அவதியுறும் மக்களை அவற்றினின்று விடுவித்து ஆண்டவனை அடைய வைக்கும் பெரு நோக்குடன் பணியாற்ற கடந்த 1976ம் ஆண்டு வைகாசி மாதத்தில் ஆஸ்ரமம் ஒன்று நுவரேலியாவில் ஆரம்பிக்கப் பட்டது. ஓரிரு மாதங்கள் ஆஸ்ரமம் போல் நடந்தது. கூட்டம் அதிகரிக்க பக்தர்களிடையே வஞ்சகம் சூதுபொருமை தலையெடுத்தன, பிறவிப் பெருங் கடலை நீந்தி இறைவனடியைச் சேர வேண்டுமென்ற தாகமுடைய ஒரு குடும்பத்தினர் ஆஸ்ரமத்துச் சாமியாரிடம் தம் எண்ணத்தைக் கூறினர். அவரும் அத் தாகத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்து அவ்வழியில் அவர்களை இட்டுச் செல்லத் தலைப்பட்டார்: விட்டகுறை தொட்டகுறையோ தெரியாது அக்குடும்பத்திலுள்ள சிறுவனைத் தனக்கு வாரிசாக வைக்கவும் தலைப்பட்டார். அதுகண்டு சாமியாரின் பிரதம சிஷ்யை எனக் கூறிக்கொள்ளும் அம்மையார் ஒருவர் கட்டடஒப்பந்தகாரர்: டாக்டர்: கடைமுதலாளி: ஆசிரியர் போன்ற பலதரப்பட்ட பக்தர்களைச் சேர்த்து சிறுவனுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் இரனேரன்ன கொடுமைகள் செய்தார், அம்மையாரைப் பின்பற்றி எல்லா பக்தர்களும் அதர்மச் செல்கள் செய்தனர். அவர்களை அழிப்பதற்குச் சூனியம்செய்து ஆஸ்ரமத்தில் வைக்கப் பட்டது. அவனை கொலை செயவும் திட்டங்கள் தீட்டப் பட்டன, அவைகளைச் சுட்டிக்காட்டி நேரடியாகவும் கடிதமூலமும் தொடர் கொண்டு அவ்விதமான அசுரச் செயல்களில் ஈடுபட வேண்டாமெனக் கேட்டுக் கொண்டபோது சொத்துரிமை படைபலம் பணபலம் சபை அகார பலம் அரச உதவி முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைக் கொண்டு அவர்களை அடக்கமுற்பட்டனர், அசத்தியமும் அதர்மமும் வெற்றியடையவில்லை. மேலும் அக்குடும்பத்தினரை அழிக்க முயன்ருர்கள், முடியவில்லை இறுதியாகச் சாமியாரையும் அக்குடும்பத்தினரையும் அழிக்ப் பாரதத்தில் சூனியம் செய்யப்பட்டது. அதுவும் அவர்கட்குத் தோல்வியாக முடிந்தது. இத்தகைய அசுரச் செயல்கள் செய்யும் பக்தர்கள்தான் ஆஸ்ரம வாசிகள்.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபாலயோகி மகாராச் அவர்கள் தபசு புரிந்து நர்மதாகதியில் எடுத்த மகா சக்திவாய்ந்த புனித லிங்கத்தை நூரளை ஆஸ்ரமத்கில் சென்ற 19 10 78ல் தாமே பிரதிஷ்டை செய்து வைத்தார்கள். ஆஸ்ரமம் என்னும்போது அங்கு குரு லிங்கம் சங்கமம் அமையவேண்டும். ஆனல் நூரளை ஆஸ்ரமத்தில் அவை அமையவில்லை. குருவாக இருக்க வேண்டிய சாமியார் இன்னமும் குருவென்ற ஸ்தானத்திற்கு வரவில்லை. ஆன்மபக்குவத் திற்கேற்ப பத்தர்களைத் தரம் பிரிக்கவில்லை யோக போதனையோ சாதனையோ இல்லை. உலகவிஷயங்களைப் பேசிப் பொழுதைப் போக்கிருர். அவர் கூறும் நல்லவற்றைக் கேட்காது அவரையோ சூனியம் செய்து அழிக்குமளவிற்குச் சீடரும் பக்தர்களும் முன்னேறுவதற்கு இடங்கொடுததவர் குருவாக முடியாது. தவறு செய்யும் பக்தர்களைத் தண்டித்து திருத்தாதவர் குருவாகவோ சாமியாராகவோ மடாதிபதி யாகவோ இருக்கத்தகுதி அற்றவர். லிங்கத்திற்குத் தவருது பூஜை களும் நடை பெறுகின்றன. ஆஸ்ரமத்தில் தியான மண்டபம் அமைத்துச் சிவலிங்கம் யோகப் பிரதிஸ்டை செய்வது சீடர்களும் தூய மனத்தினரான பக்தர்களும் அமைதியாக இருந்து குவிந்த மனத்துடன் இறைவனைத்தியானம் செய்வதற்கே, ஆனல் அங்கு தியானமில்லை அமைதியுமில்லை பெண்கள் கூட்டமே உண்டு, சங்கமத்தை எழுதமுடியாது. பொய் களவு பொருமை,வஞ்சகம், சூது, மண்கொள்ளை,சூனியம், கொலைமுயற்சி போன்ற அரக்கத்தன்மை படைத்தோர்தான் அங்குள்ள சங்கத்தார்: சதித்திட்டங்கள்தீட்டுவதே அவர்கள் செய்யும் சற்சங்கம், அவற்றைச் செயற்படுத்தத் தெண்டிப்பதே அவர்கள் இறைவனையடையும் மார்க்கம் மேற் கூறப்பட்ட தன்மையான குருவும் லிங்கமும் அமையப் பெற்றது தான் நூரளை ஆஸ்ரமமான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சிவபாலயோகி மகராஜீ தியான மந்திர்

ஆஸ்ரமதர்த்துக் கொவ்வாத அசுரச் செயல்கள் நடக்குமிடம் தியான மந்திரா? ஆஸ்ரமமா? யோகமோ சாதனையோ போதிக்கப்படாத இடம் தியானமந்திரா? ஆஸ்ரமம் செல்லும் பக்தர்களை வராதே வந்தால் தூக்கி வெளியில் வீசுவோம் போ வெளியில் எனக் கூறப்படும் இடம் தியானமந்திரா? தியான மண்டபத்தில் ஆண்டவன் முன்னிலையில் அரசமந்திரிமார்களுக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவிப்பதும் இலச்சாதிபதிக்கும் பிச்சாதிபதிக்கும் பேதம் காட்டுவதும் ஆஸ்ரமமா? காமம் காஞ்சனம் போன்றவைகளைத் துறக்க வழிகாட்ட வேண்டிய இடத்தில் அமைதியாகவிருந்து ஆண்டவனைத் தியானிக்கும் மண்டபததில் கலியாண வைபவமா? செல்வம் சேர்க்க யந்திரமா? முகவசியமா? அசுரச் செயல்கள் நடைபெற இடமளிப்மதும்? கொடுத்தவாக்குறுதிகளை மீறுவதும் சபையினரின் அதிகாரத்திற்கும் பக்தர்களின் மிரட்டலுக்கும் பயந்து சும்மா இருப்பதும் எல்லாம் வலல இறைவனை அடையும் வழியைக் காட்டும சாமிககழகா? இல்லவே இல்லை. ஆகவே இனிமேலாவது மேற்படி ஆஸ்ரமத்தை நிர்வகிக்தம் அநகாரசபைக் குழுவினரோ ஆஸ்ரமத்துச் சாமியாரோ சீடர்களோ பக்தர்களோ ஆஸ்ரமதர்மத்துக்கு ஏற்ப அதை நிரவகிக்குமாறு வேணடுகிருேம். இந்த சூழ்நிலையில் இயங்குமாயின் உள்ளுக்கு இருக்கும் தில்லுமுல்லுகள் சந்திரதீபமூலம் வெளியிடப்படும்

சி.நடராஜா

டியேற்றும் தினத்துக்கு முதன் நாள் மாலையே மங்கல வாத்தியத்துடன் கோயில் முன்றலை இத்தேர் வந்தடையும்.

தேரிலிருந்து தாம்பாளத்து கொடிச்சீலையை உபயகாரர் ஆகிய செங்குந்தப் பெருமகன் தலையில் சுமந்து சென்று கோவில் பிரதம குருக்களிடம் கையளிப்பார் அடுத்த நாட் காலையே கொடியேற்று வைபவம் டைபெறும்.

நல்லூர் சட்டநாதர் கோவிலுக்கும் செங்குந்த சமூகத்தவரே அம்மன் திருவிழாவுக்கும் சிவன் திருவிழாவுக்கும் கொடிச்சீலை கொடுப்பார்கள், ஆனல் கோவில் நிர்வாகத்தினர் தமது கேடகத்தை அனுப்பி அக்கேடக பீடத்தில் வைத்தே கொடிச்சீலை காவிக்கொண்டு மங்கள வாத்தியம் முழங்க கொடிச் சீலை கோயிலை சேரும்.

இப்படிக்கு
வே சின்னத்துரை

## சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு கேக் வெட்டினல் அது கிறிஸ்தவத் தமிழ் ஆகாதா

தெல்லிப்பழை துர்க்கை கோயில் திருப்பணிச் சபைத் தலைவி துர்க்கா துரந்தரி தமது பிறந்த நாட் கொண்டாட்டத்திற்கு கேக் வெட்டியதாக தெல்லிப் பழையைச் சேர்ந்த பல மக்கள் நம்மிடம் செய்தி தெரிவிக்கின்றனர்

கேக்கில் முட்டை கலந்ததோ அல்லது வேறுவகையோ என இச் செய்தியை தெரிவித்தவரிடம் கேட்ட போது இதை அறிந்த துர்க்கை கோவில் தர்மகத்தா சபையைச்சேர்த ஒருவர் அது வெயிரேறியன் கேக் என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னர். சொல்லி விட்டு வெயிரேறியன் கேக்கும் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வெட்டக் கூடாதோ? வெட்டினல் என்ன தவறு எனக் கேட்டார்?

நான் சொன்னேன் கேக்கிலை முட்டையோ முருங்கக்காய் சாறோ விட்டுச் செய்தது பற்றி நான் கருதவில்லை. எவ்வாறு மோதகத்தில் முட்டை சேர்க்க மாட்டாதோ அதே போன்று சைவப் பலகாரங்கள் யாவற்றிலும் மாமிசசம்பந்தம் வராதபடி பேர் உள்ளது. மோதகம் முறுக்கு வாய்பன் பிட்டு இட்டலி தோசை இவையில் மாமிச சம்பந்தம் இராது.

ஆனல் கேக் பற்றிக் இவையாவும் கிறீஸ்த்தவரின் மாமிசம் கலந்த பலகாரம். இவற்றை நாம் நீர் சொல்வது போல் வெயிற்றேறியன் என்று சொல்ல முடியாது! இவை எல்லாம் இயல்பு அல்லாது இறக்குமதி நாகரீகங்கள் எனக் கூறிமுடித்தேன் காலத்திற்கு ஏற்ப நமது சைவ கலாச்சாரங்களை மாற்றி அமைப்பதானல் பின்னர் அது சிவசம்பந்த மில்லாது அவமான செயலாகும் என்பதை நம் சைவமக்கள் என்று உணர்வாரோ? கள்ளுத் தவறணையை மோர்க்கடை எனப்பேரிடலாமே?

## கோயிலில் கொடிச் சீலை அறுந்து விழுந்தது தவச்சார்பிலாத அந்தணர் செயல் தவறுதோ

மாதகல் நுணைசை முருகன் ஆலயத்தில் பிழையான வகை நடந்திடும் ஓர் குருக்களை எஜமான் சென்ற திருவிழா பட்சத்து கொடியேற்ற விடுத்தார்,

ஊர் மக்கள் பலர் இந்தக்குருக்களின் தவறான நடத்தைகளைக் கண்டு அவர் கொடியேற்றி உபயத்தை நடத்துவதை விரும்பவில்லை. ஆனல் நிர்வாகி அவரையே கொடியேற்ற விடுத்தார்.

அதன்படி குருக்கள் கொடியேற்றினர். கொடிச்சீலை கொடி மரத்தின் மேல் ஏற்றப்படும் பொழுது அறுந்து குருக்கள் தலையில் வீழ்ந்தது, குருக்கள் அத்துடன் பக்கத்தில் படுத்துக்கொண்டார், சிறிதுவேளையின் பின்னர் மறுபடி கிரியைசெய்து கொடியேற்றினர் அந்த தவறான நடத்தை உடையபிராமணி,

இந்த அபசகுனவிளைவாக அந்த திருவிழாக்காலத்தில் 4 5ம் திருவிழாவில் இரவு இரண்டுண்பிள்ளைகள் கோயில் தெற்கே உள்ளகிணற்றில் தவறிவீழ்ந்து ஒருவர் தப்பிமற்றவர் தூக்கிவரப்பட்டு ஆறுமுகசாமி சபை முன்படியில்வைத்து அந்த இடத்தில் அப்பிள்ளை இறந்தது, கிணற்றில் இறந்தபின் தூக்கிவரப்பட்டு இருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது,

இந்த மரணசம்பவத்திற்கு ஒரு பிரயாச்சித்தம் செய்யவில்லையாம் தீர்த்த தினத்தன்று கொடியேற்றிய குருக்களின் பெண்பிள்ளை ஒன்றும் கிணற்றில் வீழ்ந்தது.

இந்தச்சண்டாளர்களை நாம் எவ்வாறு திருந்த வைக்கலாம். உண்மையாக இந்த நெறி அறியாத சண்டாளப் பிராமணர்களை அகற்றிவிட்டு சாதாரண மனிதர் பூசை செய்வதும் அல்லவா?

## தவச்சார்பு இலாத சண்டாளப் பிராமணராலும் தவம் அறியாத நிர்வாகிகளாலும் நமது அருமந்த சைவ நெறி தலைகீழாகியது

நமது கோயில்களும் சினிமாக் கொட்டகைகளும் சலூன்கடைகளும் வணணரது லோன்றிகளும் மதுபம் பனையுடன் தேனீர் கடைகளும் எல்லாம் இன்று சரி சமமாகக் கருதவேண்டியிருக்கிறது,

இந்தச் சமத் துவத்துவத்தை ஏற்படுத்திவிட்டது எல்லாருடைய ஒலிப்பருக்கிப் பாவனை ஒன்றே.

சலூன் லோன்றி சினிமாக் கொட்டகை தாழ்த்தப்பட்டோரின் திருமணவிழா இவ்வளவும் தமது வியாபாரத்துறையை விளம்பரப்படுத்த வேண்டி பெரும் சத்தம் போடும் ஒலி பெட்டிகளை வைத்து இரவு பகல் ஓய்வில்லாது பாடி தமது பொழுது போக்கிறகும் இவை ஒருகொண்டாட்டமாக வைக்கின்றனர்.

ஆனல் ஒருகோயில் நிலையும் அது ஒரு பிரசார நிலையமா பொழுதுபோக்கு நிலையமா என்ருல் அது அப்படி அன்று! அது வழிபாட்டு இடம். ஆகவே அங்கு ஒலிபெருக்கியால் என்ன பிரயோசனமாகின்றது அன்றி ஒலி பருக்கியால் கயிலிற்கு என் பயன் விளைகின்றது என்பதே கேள்வி'

ஒலிபெருக்கிப் பாவனை கோவிலில் இருக்கவேண்டிய தவம் தருமம் இரண்டையும் வேரோடு சிதைக்கின்றது

இதைஇல்லை என்று மறுத்துப் பேச இலங்கை நகரில் யாரும் சைவம் விளங்கியவர் இருக்கமாட்டார்

ஆனல் இதைவிநம்பும் சண்டாளப்பிராமணனும் காடையாகிய நிர்வாகியும் உணர்கின்ருர் இல்லை என்பது வருத்திற்கு உரியது.

கடைகளும் சண்டாளப் பிராமணனும் தவநெறி உணராத நிர்வாகமும பிரசங்கவியாபாரியும் எல்லாரு நமது சைவநெறியை ஒருவிழாவாக்கி தவம தருமம் முதல் இரணடையும் நாசமாக்கினர்.

உண்மையைநாம் உணர்வதென்றல் முன்னே தரப்பட்ட தேவாரத்தில் சம்பந்தர் என் சொல்கின்ருர் என்ருல் உலகில் இயற்கையை ஒழித்திட்டு அற்றவர்க் குற்ற சிவன உறையும் கோயில் என்றதாக. எனவே உண்மையை உணர்ந்து நடவுங்கள்.

## சந்திரதீபம் இருளில் சுடர் விடுகின்றது என்கின்ருர் ஓர் அன்பர்

திரு வை நல்லையா அவர்கள்
ஆசிரியர்
சந்திரதீபம்
கொக்குவில்மேற்கு

பேரன்புடையீர்
ஓம் விஞயகா நம
சந்திரதீபம்
சைவம்வளர்க்கும் தமிழ்ப் பத்திரிகை
தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது

இதழ் 3ன் சுடர் 3ம் 4ம் பார்க்கக் கிடைத்தது ஒரு பாக்கியம். தந்துதவிய 'திருவாளர்பா. பஞ்சநதம் அவர்களுக்த நனறிகள் பல. அரசியல் வானில் ஒரு தீப்பொறி பறந்தது அது ஒரு காலம். இன்று இது சந்திரதீபம் சைவசமயிகள் மத்தியில் உள்ள இருளில் காணும் அசிங்கத்தையும் ஆபத்தையும் காணக்கூடியதாக ஒளி வீசும் தீபம் போல் சுடர் விடுவது எதை ஒக்த மெனில் நல்லார் ஒருவர் உளரேல் அவர் பால் எல்லார்க்கும் பெய்யுமாம மழைஎன்ருப் போல் யாரோ ஒரு சில புண்ணியாத்மாக்களின் ஒரு சில தவப்பயனுக இங்கு இந்த இருளில் ஓர் தீபமாக சுடர் விடுகிறது என்பது நிச்சயம்

அழகாக ஆணித்தரமாக அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியவை உள்ளத்தைத் தொட்டு ஊனினை உருக்கும் சக்தி வாய்ந்தவை, தங்களின இவ்வரிய துணிவும் நேர்மையும் மிக்க சேவை இக்காலத்தில் கண்ட கோலத்திற்கு ஓர் அருமருந்து போன்ற தெனலாம்.

அன்புடனும் வேண்டும்
அன்பர்க்கன்பன்
தி சுப்பிரமணியம்

## நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடிச் சீலை

ஆசிரியர் சந்திரதீபம்
ஐயா

மேற்படி தலையங்கத்தில் நீங்கள் பிரசுரித்த கட்டுரை மிகநன்று. செங்குந்த சமூகத்தார் மிகவும் கீழ்தரமான ஜாதி என்று நாவலரும் மற்றும் அயலிலுள்ளோரும் இறக்கி வைததுவிட்டாகள் இத்தலைகாலமாக. ஆனல் அவாகள் மிகவும்மேம்பட்ட இனத்தவர் என்பதனை நீங்கள் அப்பட்டமாக சரித்திரரீதியாக காட்டிவிட்டீர்கள். ஐயா, எநதக்கோவிலுக்கும் கொடுக்கும் கொடிச்சீலை மிகவும், புனிதமாகவும், தாம்பாளத்தில் வைத்து உபயகாரரால் தலையில் சுமந்து கொண்டு மங்கல வாத்தியம் முழங்க கோவிலைச் சென்றடையும்.

ஆனல் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலுக்கு கொடுக்கும் கொடிச்சீலை இப்டிபச் சர்வசாதாரண மாகக் கொண்டு செல்லப்படுவதில்லை. இக்கொடிச்சீலையைக் கொடுக்கும் செங்குந்த மரபினர் தங்கள் தங்களுக்கியனறபொருளுதவி கொடுத்து செய்யப்பட்ட ஒரு ... முறைமை

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கிலிருக்கும் திரு வை நல்லையா அவர்களால் தமது சந்திரதீப அச்சகத்தில் பதித்து பிரசுரிக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org